நல்லூர்
யாழ்ப்பாணம்

# சுதந்திரப் பறவைகள்

★ மாதர் வெளியீடு ★

யூலை - 1985

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொழுத்துவோம்.

*— புரட்சிக் கவிஞன் பாரதி —*

விலை: **3-50**

## வாசகர்களுக்கு வேண்டுகோள்!

இவ்விதழ் பற்றிய தங்கள் ஆக்கபூர்வமான விமர்சனங்களையும், உங்கள் படைப்புக்களையும், மாதர் வெளியீடு உறுப்பினர்களிடம் கையளிக்கவும். இதன் மூலம் உங்களது இம் முயற்சி பற்றிய கண்ணோட்டத்தையும், ஊக்கிவிப்பையும் பெறுவோம் நாம்.

''தத்துவம்.... பொதுமக்களைப் பற்றிக் கொண்டவுடன் பொருளாயத சக்தியாக மாறிவிடுகிறது.'' — மார்க்ஸ்

— ஆசிரியர் குழு

# பறவை 1

உள்ளே,


1. வேண்டும், வேண்டும் — கவிதை

2. இன்றைய சமுதாய அமைப்பில் பெண்களின் நிலைப்பாடு — கட்டுரை

3. தமிழ் ஈழப் போராட்டத்தின் வரலாற்றுப் பரிணமம் — கட்டுரை

4. சிந்திக்க மறுப்பதேன்? — கவிதை

5. வடமராட்சியின் மூலவளங்கள் — ஆய்வு

6. யுத்த நிறுத்தமும், அன்னியரின் ராஜதந்திரமும் — கட்டுரை

7. பெண்ணினமே! — கவிதை

8. கரையை உடைக்கும் புதிய அலைகள் — நாடகம்.

## வேண்டும் வேண்டும்

நல்லூர்
யாழ்ப்பாணம்

அன்றே........

வேண்டும் வேண்டும்
சுதந்திரம் வேண்டும்
அந்நியரே அகலுங்கள்
அடிமைத் தளையை நீக்குங்கள்
என்று கேட்டனர்
இந் நாட்டு மக்கள்
அன்றைய ஐரோப்பியரை..........

இன்றே.........

வேண்டும் வேண்டும்
தமிழீழம் வேண்டும்
சோஷலிசம் பேணுங்கள்
சுரண்டலை ஒழியுங்கள்
என்று கேட்கின்றனர்
இன்றைய தலைமுறைகள்
தமிழினத்தைப் பார்த்தே ..........

என்றுமோ............

வேண்டும் வேண்டும்
விடுதலை வேண்டும்
பெண்ணுக்கு சமவுரிமை கொடுங்கள்
பெண்ணடிமைகளையும் நீக்குங்கள்
என்று கேட்கின்றனர்
எமதருமைச் சோதரிகள்
இன்றைய இளைஞரிடம்...........

# இன்றைய சமுதாய அமைப்பில் பெண்களின் நிலைப்பாடு

இன்றைய அரசியல் சமூகப் பொருளாதார சூழலில் சகல ஒடுக்கு முறைகளிலிருந்து விடுபடுவதற்கான போராட்டக் களத்தில் காலம் காலமாக நிரந்தர அடிமைகளாக உள்ள பெண்களின் நிலைப்பாடுகள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

பெண்கள் ஏன் அடிமைகளாக, உடைமைப் பண்டங்களில் ஒன்ருகக் கணிக்கப்படுகிருர்கள்? பல்வேறு சமுதாயப் பணிகளில் ஏன் இரண்டாந் தரத்தில் வைக்கப் பட்டுள்ளார்கள்? ஏன் எடுத்து ஆளப்படும் உற்பத்திக் கருவிகளில் ஒன்ருகக் கருதப் படுகிருர்கள் என்ற கேள்விகள் எழுப்பப்படுகின்றன. அந்நிலைப் பாட்டிற்கு வரலாற்றுக் காரணிகள் எவை? இவர்களது மெய்யான விடுதலை எந்தத் திசையமைவைப் பெற வேண்டும்?

ஆண்களும் பெண்களும் தமது அன்ருட தேவைகளை, பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சமத்துவமாக வேறுபாடுகளற்கு உழைத்து வந்த புராதன மக்கள் கூட்டு வாழ்க்கையே மனுக் குலத்தின் முதல் சமுதாய அமைப்பாக இருந்தது. உதாரணமாக உணவுத் தோட்டத்தில் வேட்டையாடுதலில் இரு பாலரும் சம பங்காற்றினர். உணவு சம பகிந்தளிக்கப்பட்டது, தேவையின் அடிப்படையில். ஆனல் காலப்போக்கில் உழைப்பின் உற்பத்தித்திறன் அதிகரித்த போது, உற்பத்திக் கருவிகள் மேம்பாடடைந்த போது, சமூகத்தின் ஒட்டு மொத்தமான உழைப்பின் பெறுபேறுகள் உபரியான போது, தேவைக்கு அதிகமான போது, தவிர்க்க முடியாதவாறு வரலாற்று ரீதியான அடுத்த கட்டத்திற்கு, ஒரு சிலரது தனிச் செல்வக் குவிப்பிற்கு இட்டுச் சென்றது. சமுதாயத்தில் பொருளாயத ஆண்மிக ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டன. உள்ளவன், இல்லாதவன் என்ற அடிப்படையில் ஆண்டான் அடிமை என்ற நிலைப்பாடு ஏற்பட்டது. அடிமை உடமைச் சமுதாய அமைப்பு உருவாகியது. உழைப்பில் வேலைப் பிரிவினை என்ற பாகுபாடு தோன்றியது. முதல் தோன்றிய வேலைப் பிரிவினை ஆண், பெண் என்ற வேறுபாடு தான் (இங்கு குறிப்பிடப்படுவது உடல் ரீதியான வேறுபாடு அல்ல, பொருளாயத உழைப்பைப் பற்றியது) கூட்டு உழைப்பின் பங்களிப்பிலும் அதன நுகர்விலும் ஆண்களை மேலானவர்களாகவும் பெண்களை இரண்டாம் தரத்திற்கும் தள்ளி விட்டது. ஆண்களை வெளியே உழைக்கவும், சமூகக்குழுக்களைப் பாதுகாப்பவர் களாகவும் பெண்களை சமுதாய ஒழுங்கமைவின் கூருகிய குடும்பத்துடனும் பிணைத்து விட்டது. பெண்களை குழந்தைகளைப் பெற்று பராமரிப்பவர்களாகவும், வீட்டு வேலை களைச் செய்யும் இயந்திரமாகவும் ஆண்களது போகப் பண்டங்களாகவும் மாற்றி விட்டது. ஊதியமற்ற ஏலாளர்களாக குடும்பத் தலைவன் இடும் கட்டளைகளை ''சிரமேற்'' கொண்டு, ''ஆள்பவன் சித்தத்தை'' நிறைவேற்றும் பேதைகளாயினர் பெண்கள். இவர்கள் ஆளப்படும் அடிமைகளாயினர். இதனல் இவர்களது சுதந்திரம் மட்டுப் படுத்தப்பட்டது சமூகத்தின் முக்கிய நடவடிக்கைகளிலிருந்து பொது வாழ்விலிருந்து ஒதுக்கப்பட்டு அடிமைகள் தரத்திற்கு தள்ளி வைக்கப்பட்டனர். பின்னர் சமுதாய அமைப்புகள் பல வடிவங்கள் எடுத்த போதிலும் (நிலப்பிரபுத்துவம் முதலாளித்துவம்) பெண்கள் நிலைப்பாடு மாறவில்லை. இன்னும் பெண்கள் நவீன அடிமைகளாக ஜீவ னற்ற, ஊக்குவிப்பற்ற சமுதாயத்தின் பொது நடவடிக்கைகளின் கொள்கை வகுப்பி னின்றும் விலக்கப்பட்டவர்களாக உள்ளனர்.

பெண்கள் "மெல்லியலாளர்கள்" எனக் கருதப்படுகிறுர்கள். எனவே வெளி வேலைகளைச் செய்வதற்கு உள, உடல் ரீதியாக தகுதியற்றவர் என்ற போலி யான நிலைப்பாடு வலுவடைந்துள்ளது. இது பெண்களை அடிமை நிலையில் நிரந்தர மாக்குவதற்கு வகுக்கப்பட்டதொன்று. ஆனுல் விஞ்ஞானம் உடலியல் ரீதியாகவோ மனே இயல் ரீதியாகவோ பின்தங்கியவர்கள் அல்லர், ஏன் சில நிலைமைகளில் ஆண் களிலும் பார்க்க உடல் உள இயல்புகளில் ஆண்களிலும் உறுதி படைத்தவர்கள் பெண்கள் என நிருபித்துள்ளது. உழைக்கும் பெண்களைப் பொறுத்தவரையில் அவர்கள் இரண்டு சுமைகளைத் தாங்க வேண்டி உள்ளது. ஒன்று, குடும்பத்தை பராமரிப்பது, மற்றது குடும்பத்திற்காக உழைப்பது. வெளியில் வேலை செய்து விட்டு வீடு திரும்பும் பெண் குடும்ப வேலைகளையும் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. ஆண்கள் குடும்பப் பராமரிப்பில் ஈடுபடுவது மிகக் குறைவு. எனவே ஒன்றில் உழைக்காத பெண் வீட்டில் சமுதாய பிரக்ஞை அற்ற பிரகிருதியாக அடைபடுகிறுள் அல்லது உழைக்கும் பெண்களுக்கு குடும்பத்தைத் தவிர்ந்த சமுதாய செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கு நேரமும் இல்லை, ஊக்குவிப்பும் இல்லை. அவர்கள் ஒதுக்கப்படுகிறுர்கள், அலுத்துச் சோர்ந்த விரக்தி நிலை அவர்களது.

மேலும் பெண்கள் போகப் பொருட்களாக உபயோகப்படுகிறுர்கள். வர்த்தக விளம்பரங்களை நோக்கினுல் பெண்களது இழிநிலை புலப்படும். மருத்துவப் பண்டங்களின் விளம்பரங்களிலும் கூட பெண்கள் படு ஆபாசமாகவே சித்திரிக்கப் படுகிறுர்கள்.

திருமண பந்தல்களிலும் பெண்களின் விருப்பார்வம் கணிக்கப்படுவ தில்லை, ஆண்களுக்குத் தான் "சுயம்வரம்" உண்டு பெண் பாக்க்கும் படலத்தில் பெண்கள் வெறும் பொம்மைகளாகவே விற்பனைக் காட்சி பொருளாகிறுர்கள். ஆண்கள் தமக்கு தேவைகளுக்கேற்ப தெரிவு செய்வார்கள். திருமணச் சந்தையில் சொத்துரிமை யின் அடிப்படையில் விலை போகிறுர்கள் பெண்கள் தனிச் சொத்துடைமையை பாகப் பிரிவினை செய்வது, சுவிகரிப்பது போன்ற நடவடிக்கைகள், தனிச் சொத்தின் கைமாற்றம் சீதனப் பிரச்சினையாக இல்லை பேயாக மாறி எமது சமுதாயத்தை சீர்கெடுத்தும் பூச்சாண்டியாக வளர்ந்துள்ளது. அதிக அளவு செல்வக் குவிப்பை செய்யக் கூடிய ஆடவனுக்கு சந்தையில் விலை அதிகம் பொருளாதார வசதி குறைந்த பெண்ணின் நிலைமை ............ கேள்விக் குறிதான் இவர்களது எதிர்காலம் சூனிய மானது, பயங்கரமானது ஒன்றில் குடும்பத்தின் சுமையைத் தாங்க வேண்டும் அல்லது அது கிட்டாவிட்டால் மற்றவர்களுக்குப் பாரமாக வேண்டும். எனவே தமது வாழ்வை நிர்ணயிக்கும் சுதந்திரம் அவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

பெண்கள் பரிபூரணமான சுதந்திரமுள்ளவர்களா என்றுல் அதுதான் இல்லை. பெண் குழந்தைகளுக்கு சோறு கறி சமைப்பதற்கான விளையாட்டுப் பொருட் கள் பொம்மைகள் தரப்படுகின்றன. இதன் மூலம் பெண் குழந்தைகளுக்கு தமது பாரம்பரியமான அன்றாட நடவடிக்கைகள் இவைதான் என்ற உணர்வு மேலோங்கு வதற்கு இடமளிக்கப்படுகின்றது அவர்கள் தாமாகவே இயந்திர ரீதியான உப்புச் சப்பற்ற அடிமைச் சிறையில் மனேஇயல் ரீதியாகத் தள்ளப்படுகின்றனர் இதற்கு மதத்தை அடிப்படையாகக் கொண்ட கலாசாரப் பொன் மூலம் மேல் பூச்சாக இடப் படுகின்றது எமது தலைவிதி இதுதான் என மறுக்க முடியாது ஏற்றுக் கொள்ள வைக்கப்படுகின்றனர் ஒரு சில மக்களினங்களில் இன்னும் பெண் சிசுக்கள் பிறந்த உடனேயே கொல்லப்படுகின்றனர் அல்லது இந்தியாவில் நடப்பது போல் பேரம்பேசி விற்கப்படுகின்றனர் எதிர்கால விபச்சாரிகள் உருவாகின்றனர். இதன் மூலம் பெண் குழந்தைகள் குடும்பத்தின் பாரம் என்ற கருத்தோட்டம் புலனுகிறது.

"பெண்களின் விடுதலைக்கு வழி கல்லூரிகள் அல்ல, பாராளுமன்றங்கள் அல்ல, படுக்கை அறையே" என லியோ டோல்ஸ்டோய் தன்னுற்றுமையுடன் கூறினர். சமுதாய அமைப்பில் பெண்களின் பாத்திரம் என்ன என்பது மேற்கூற்றிலிருந்து வெளியாகின்றது. நமது கலாச்சாரத்தில் "கற்பு" என்னும் கேடுகெட்ட கருத்திமை முன்வைக்கப்பட்டுள்ளது. "கற்பு" பெண்களை நிரந்தர அடிமைகளாக்குவதற்கான அவர்கள் வெறும் "கல் பூக்கள்" மாத்திரமே என்பதற்கான ஏற்பாடு. ஒரு பெண் தனக்கு உசந்த ஆடவனை உள ரீதியாக தேர்வு செய்வதற்கு இது தடையாகின்றது "கல்லானுலும் கணவன்" "கணவனே கண்கண்ட தெய்வம்" போன்ற சொற்றொடர்கள் மிகக் கேவலமானவை மனித உறவுகளின் சுதந்திரத்தை சுய விருப்பத்தை மட்டுப்படுத்துகின்றன. இவை முன் வைக்கப்பட்டதற்கான காரணி எது? சமுதாய அமைப்பில் ஒவ்வொரு கால கட்டத்திலும் ஆளுமை பெற்றுள்ள கூறிக்கப்பட்ட வர்க்கத்தின் நலனைப் பேணுவதற்காகவே தான் தனது குடும்பத்திற்காக அல்லும் பகலும் போராடும் பெண்கள் உழைக்கும் வர்க்கத்தின் உட்கூறுகள், ஒடுக்கப்படுகிறர்கள். இதனுல் மெய்யான சமூக முன்னேற்றம் தடை செய்யப்படுகிறது. சமுதாயத்தின் மிக முக்கிய அங்கமாகிய, மனுக்குலத்தின் தொடர்ச்சியை, பாலூட்டுவதன் மூலம், பாசத்தின் மூலம், மனித நேயத்தின் உச்சமாகிய தாய்மையின் மூலம் உறுதி செய்யும் பெண்களை ஊதியமற்ற அல்லது மிகக் குறைந்த அனுகூலம் அடையும் உழைப்பாளிகளான பெண்களை அடிமைகளாக நிரந்தர இருப்பில் இடுவதற்காகவே வைதீக பத்தாம் பசலி மத கலாச்சார ஒடுக்கு முறை வடிவங்களுள்ளன.

பெண்கள் மீது மேற் கொள்ளப்படும் ஒடுக்குமுறை பன்முகப்படுத்தப் பட்டுள்ளது. கலாச்சார ரீதியாக இளமையில் இருந்தே தாம் அலங்கார பூசிதைகளாக, போகப் பொருட்கள் முதலிய அடிமை உணர்வுகள் அவர்களுக்கு ஊட்டப்படுகின்றன. காலவதியாகி விட்ட கருத்துகள் பல்வேறு வடிவங்களிலும் புகுத்தப்படுகின்றன. கிராமிய மொழியி "பெண்டுகள் அடக்க ஒடுக்கமாயிருக்க வேண்டும்" என்பர். அடிமைத்தனத்தை தகர்க்க முற்படும் போது பெண்களை "திமிர் பிடித்தவள்" என்பர். கண்ணகி, சீதை போன்ற வான் முகட்டுக் கதாபாத்திரங்கள் நிழல் வடிவத்தில் நிஜமாக்குவதற்கு சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன ஆனுல் யதார்த்தத்தில் அரசியல் சமூகப் பொருளாதார காரணிகளின் செயல்பாடுகள் நிழலை நிஜமாக்குவதில்லை.

"ஒரு கால கட்டத்தில் சமூக முன்னேற்றம் மற்றும் மாற்றங்கள் விடுதலையை நோக்கிய மாதர் முன்னேற்றத்தால் பின் தொடரப்படும் ........ ........." "மாதர் உரிமைகளை விரிவு படுத்துவது எல்லா சமூக முன்னேற்றத்திற்கும் அடிப்படைக் கோட்பாடாகும்".

"எந்தச் சமுதாய அமைப்பிலும் சரி மாதர் விடுதலையின் அளவே பொதுவான விடுதலையின் இயல்பான அளவு கோல்" என ஃபூரியே குறிப்பிடுகிறர்.

அடிமை தனது அடிமை நிலையை பூரணமாக உணர்ந்து தனது விடுதலைக் களகப் போராட முற்படுகையில் ஏற்கனவே இருந்த பாதி அளவுக்கு அடிமை நீக்கம் பெறுகிறார் இந்த உணர்வு தன்னிச்சையாகவே உருவாகுவதில்லை வாழ்நிலை தான் உணர்வு நிலையை தோற்றுவிக்கிறது எனவே இன்றைய புரட்சிகரமான சமுதாய சூழலில் பெண்களின் பங்களிப்பு வரவேற்கப்படல் வேண்டும் அவர்களும் முன்னணிக்கு வருதல் வேண்டும் கிடுகு வேலிகள் பிய்த்தெறியப்படல் வேண்டும், தடைகள் தாண்டப் படல் வேண்டும். வெறும் பொன் தாங்கிகளாக, வரையறையற்ற சுமைதாங்கிகளாக இருக்கும் நிலை மாறவேண்டும். "சரிநிகர் சமானம்" என்பது ஏட்டளவில் அல்ல, அடிமைத்தனத்தை வேறு வடிவமாக்காது அதன் மெய்யான அர்த்தத்தில் பிரயோகிக்கப் பட வேண்டும்

ஒட்டு மொத்தமான அரசியல் சமூகப் பொருளாதார மாற்றம் ஏற்படும் போதுதான் வீட்டிலும் சரி வெளியிலும் சரி உழைக்கும் பெண்களுக்கு விடிவு உண்டு. இன்றைய சுரண்டுவோரும், சுரண்டல் படுவோரும், ஒடுக்குவோரும், ஒடுக்கப்படு வோரும் என இரு முரண்பட்ட உட்கூறுகளை உடைய சமுதாய அமைப்பில் உண்மை யான பெண் விடுதலை என்பது சாத்தியமில்லை உதாரணமாக ஆண்களுக்கும் பெண் களுக்கும் ஊதிய வேறுபாடு உண்டு மலையகத் தோட்டத் தொழிலாளர், கூலி விவசாயி கள், தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பாட்டாளிகளில் பெண்களுக்கு குறைந்த அளவிலேயே ஊதியம் தரப்படுகிறது. அரசாங்கத்தின் தொழிற் சட்டங்களும் இவ் வேறுபாட்டை அங்கீகரிக்கின்றன

மேலும் பெண்களுக்கு ஒரு சில ஜனநாயக சலுகைகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன சுவிற்சர்லாந்தில் இன்றும் பெண்களுக்கு வாக்குரிமை இல்லை. சலுகைகள் வெறும் சீர்திருத்த செயற்பாடுகளே இவை சுயேச்சையான வளர்ச்சியை திசை திருப்புகின்றன வேண்டப்படுவது உரிமைகள் சலுகைகள் அல்ல அடிமைகளது பேரார்வமிக்க எழுச்சியை மழுங்கடிக்கின்றன. இச் சீர்திருத்தவாத சலுகைகள் "நாகரீகமடைந்த" "செல்வமிக்க" என்ற வார்த்தை ஜாலங்களால் புகழாரம் சூட்டப் படும் மேலை நாடுகளில் நடப்பதென்ன? பெண்கள் வர்த்தகப் பண்டங்களாகின்றனர். பொருளாயத தேவை தான் இந் நிலைப்பாட்டைத் தோற்றுவிக்கிறது. மேலும் சமுதாய சீரழிவை எதிர் நோக்கும் அமெரிக்காவில் மூன்று நிமிடத்துக்கு ஒரு பெண் கற்பழிக்கப்படுகிறாள் "சுதந்திர தேவதை" வெறும் கற்பனையாகி பெண் வடிவத்தில் நியூயோர்க் துறைமுக வாசலில் நிற்கிறாள் அங்கே

எனவேதான் கூறுகிறோம் சமுதாய அமைப்பில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தும் போதுதான் பெண்களை அடிமை செய்யும் பழைய; பொறியமைவு தகர்க்கப்பட்டு அதனிடத்தில் உழைப்பவர்கள் ஆட்சி அதிகாரம் அமைக்கப்படும் போதுதான், உழைப்பு சக்திதான், உழைப்பின் உற்பத்தித்திறன் தான், சமூக ஏற்றத் தாழ்வுகளை அகற்றிவிடும் சக்தி, என்னும் புதிய மெய்யான சமுதாய அமைப்பு தோன்றும் போதுதான், ஆண்கள் பெண்கள் என்ற அசமத்துவம் நீக்கப்படும், பெண்கள் மெய்யான விடுதலையைப் பெறுவர் புராதன சமுதாய அமைப்புகளின் எச்சசொச்சமாக உள்ளது பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுதல். அடுப்பூது வதற்கே தகுதியான, இனிய நாதமிசைக்கும் புல்லாங்குழல்கள் இவர்கள், இப் புல்லாங் குழல்கள் எடுத்து ஆளப்படுவதற்கே உள்ளன; தாமே நாதமிசைப்பதில்லை, தமக்கென்ற உணர்வு அற்றவர்கள் இவர்கள் என்ற கருத்தோட்டம் ஆழமாக ஊடுருவியுள்ள எமது சமுதாய அமைப்பு அழிக்கப்படுவதற்கு ஒடுக்கு முறையை எதிர்க்கும் வீரர்ந்த தமது ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்குவதன் மூலம் நமது பெண்கள் தமது விடிவு காலத்தை உறுதி செய்ய வேண்டும்.

# தமிழ் ஈழப் போராட்டத்தின் வரலாற்றுப் பரிணாமம்.

ஒரு சமூகக் குழுவினுடைய சுயநிர்ணய உரிமைக்கான தகமைகளை ஆராயும்போது தனித்துவ சிறப்பியல்புகளை உள்ளடக்கிய அரசியல் சமூக பொருளாதார இயல்புகளை வரலாற்று ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சமூக இயல் ரீதியாகவும் ஆய்வு செய்தல் முன் நிபந்தனையாகின்றது. அப்போதுதான் அதன் உள்ளீடான உறவுகள் மற்றும், மற்றைய சமூகக் குழுக்களுடன் அதன் உறவுகள் பற்றிய சர்வாம்சமான நிலைப்பாட்டை விஞ்ஞான பூர்வமாக சித்தரிக்க முடியும். வரலாற்று ரீதியாக இலங்கையின் சமுதாய அமைப்பு, ஆசிய பாணியிலான இயல்புகளையும், அதேவேளை அதற்கே உரித்தான சிறப்பாம்சமாகிய குலத்தொழிலை அடிநாதமாகக் கொண்ட தந்தை வழி நிலப்பிரபுத்துவ அமைப்பையும் கொண்டதாக அமைந்துள்ளது. ஆனால் தமிழ், சிங்கள சமுதாய அமைப்புக்கள் தமக்கே உரித்தான தனித்துவ சிறப்பியல்புகளையும் கொண்டிருந்தன. தமிழ், சிங்கள சமுதாய அமைப்புகள் வேறுபட்ட சமுதாய பரிணாம வளர்ச்சியை தமது இயல்பாகக் கொண்டுள்ளன. இது அவற்றின் அரசியல் சமூகப் பொருளாதார நிலைப்பாட்டை பிரதிபலிக்கின்றது. அதிகார வர்க்கத்தினரின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக எழுப்பப்பட்ட சமூகக் கட்டமைப்பு இருபகுதியினருக்கும் பொதுவானவை. என்றாலும் இயற்கைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட தந்தைவழிக் குலத்தொழில் கட்டமைப்பில்ஏற்றத் தாழ்வான (மதசார்பு) நிலைமை தமிழரின் வேறுபாட்டை முன்வைக்கிறது. மேலும் வேறுபட்ட வரையறுக்கப்பட்ட நிலத் தொடர்பான பாரம்பரிய பிரதேசங்களும் இவ்விரு இனங்களுக்கும் இருந்தன. விஜயனது வருகையைப் பற்றிய கர்ணபரம்பரைக் கதை இரு இனங்களுக்கும் இடையேயான முரண்பாட்டை வெளிப்படுத்துகின்ற கற்பனைக் கதையேயாகும், இம் முரண்பாட்டை தக்க வைப்பதற்கான முயற்சியுமாகும். ஆனாலும் இலங்கையின் சரித்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் இங்கும் ஒரு சமூகக்குழு வாழ்ந்தது என்று ஏற்றுக்கொள்ளப் பட்டடுள்ளது. உதாரணமாக ஆனைக்கோட்டைத் தகழிகள் இலங்கையில் அறியப்பட்ட சரித்திரத்திற்கு முற்பட்டவை. இதேபோன்ற தகழிகள் தென்னிந்தியாவின் தமிழ்ப் பகுதிகளில் காணப்படுகின்றன. எனவே அங்கும் இங்கும் ஒரே கலாச்சாரப் பாராம்பரியத்தை உடையோர் வாழ்ந்தனர் என்பது உண்மையாகின்றது. இலங்கையின் மூத்த குடியினர் பழைய தமிழ்மொழி பேசிய திராவிடக் கலாச்சாரத்தை உடையவர்களே.

தமிழ் பேசும் மக்களை, தமக்கேயுரித்தான மொழி, கலாச்சாரம், பொருளாதார வாழ்நிலையைக் கொண்டு புவியியல் தொடர்பான பாரம்பரிய பிரதேசத்தில் நிலையான சமூகக் குழுவாக வாழ்ந்தனர். இவர்கள் வாழ்ந்த பிராந்தியங்கள் வடக்குக்! கிழக்கு பிரதேசங்களாகும். சிங்கள மக்கள் தெற்கிலும், மேற்கிலும், மத்திய பிரதேசத்திலும் நிலைகொண்டிருந்தனர். [தமிழ், சிங்கள அரசர்களால் இந்நிலப் பரப்புக்கள் மாறிமாறி ஆக்கிரமிக்கப்பட்டாலும், இரு பகுதியினருமே கலப்பற்று தமக்கேயுரித்தான சிறப்பியல்புகளை இழக்காது வாழ்ந்தமையும், இவ் வாக்கிரமிப்புக்கள் குறுகிய காலகட்டத்தை கொண்டவையாக இருந்தன என்பதும், இரு வேறுபட்ட இனங்களாக வாழ்நிலையைக் கொண்டிருந்தனர் என்பதைக் குறிக்கின்றது.]

ஐரோப்பியர் இங்கு வந்தபோது இரு வேறுபட்ட தேசிய இனங்களையும் நாகரீகங்களையும் உடைய இரு அரசுக்கள் இங்கு இருப்பதை கண்ணுற்றனர். இதனை வரலாற்றுக் குறிப்புக்கள் உர்ஜிதம் செய்கின்றன. ஐரோப்பியர் இங்கு வணிக நோக்கில் தமது ஆக்கிரமிப்பை மேற்கொண்டனர் முதலில் தமிழ் பேசும் மக்களும், பின்னர் சிங்கள மொழி பேசும் மக்களும் தமது முடியரசை அடிப்படையாக கொண்ட சுய இறைமையை இழந்தனர். பின்பு இங்கு வந்த ஆங்கிலேயரே கண்டியரசனை கைக்கொண்டதன் பின் இலங்கைத் தீவில் ஏற்கனவே இருந்து ஒரு தீவில் இரு அரசுக்கள் என்ற நிலைப்பாட்டை மாற்றி ஒரு தீவில் ஓரரசு என்ற நிலைப்பாட்டை ஏற்படுத்தினர். ஆங்கிலேயர் இம் முடிவுக்கு வருவதற்கு மூன்று காரணிகள் ஏதுவாக இருந்தன. இவை ஆங்கிலேயரது ஏகாதிபத்தியத்தின் வெளிப்பாடாகும்.

முதலாவதாக, இலங்கையின் மூலவளங்களை சுரண்டுவதற்கு, போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதற்கு வசதியான இணைந்த பாரிய நிலப்பரப்பு காணப்பட்டமை.

இரண்டாவதாக, தமது நாட்டின் உற்பத்திப் பண்டங்களை சந்தைப்படுத்துவதற்கு அரசியல் ரீதியாக இணைக்கப்பட்ட நிலப்பரப்புக்கள் என்ற முன்தேவைகள்.

மூன்றாவதாக, மேற்கூறிய வணிக நோக்கை நிர்வகிப்பதற்கு இலகுவான கேந்திர வர்த்தக மையம் ஒன்றின் அவசியம் ஆகியனவை. இம்மையமாக கொழும்பு விளங்கியது. ஏற்றுமதி, இறக்குமதிக்காக இங்கு ஒரு துறைமுகம் ஏற்படுத்தப்பட்டது.

ஆக்கிரமிப்பின் மூலம் இணைக்கப்பட்ட இத்தீவில் தமது மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக ஐரோப்பியர் தமது நாடுகளின் அரசியல் சட்ட கலாச்சார வடிவிலமைந்த ஆட்சிமுறையை ஏற்படுத்தினர் உதாரணமாக ஆங்கிலேயர் தமது பாராளுமன்ற அரசியல் முறையையும், சட்ட அமைவில் டச் – சோமானிய முறைமையையும் கலாச்சாரவாழ்வில் மதம் சார்ந்த கல்வித்திட்டத்தையும் புகுத்தினர். இம்மாற்றங்கள் இங்கு வாழ்ந்த சுதேசிய மக்களிடையே மேலாதிக்க சமூக அந்தஸ்துப்பெற்ற ஒரு புதிய வர்க்கத்தின் தோற்றத்திற்கு இட்டுச் சென்றது. தமிழ், சிங்கள அரசர்களின் பிரதானிகளாக இருந்தவர்கள் தமது நலனைப் பேணிப் பாதுகாப்பதற்காக மதம் மாறியும் பெயர்களை மாற்றியும் அந்நிய கல்வித்திட்டத்தை ஏற்றும் சமுதாயத்தில் "ஆண்ட பரம்பரை" என்னும் நாமத்தை தக்க வைத்துக் கொண்டனர் உதாரணமாக இன்றும் ஆளும்வர்க்கத்தினரை உற்று நோக்கின் அவர்கள் பௌத்தர்களாக இருப்பினும், கிறீஸ்தவ பெயரை தமது முதல் நாமமாக வைத்துள்ளனர். அதாவது Cyril Mathew, Junius Richard Jayawardane, Felix Bandaranayake போன்றவை. இவர்களது மையம் கொழும்பை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இத்தமிழ், சிங்கள அதிகாரவர்க்கத்தினர் தமது வர்க்க நலனைப் பேணிப் பாதுகாப்பதற்காக ஐரோப்பிய ஏகாதிபத்தியத்திற்கு இசைவாக, இணக்கமாக நடந்து கொண்டனர் இவர்கள் நிலப்பிரபுத்துவ பரம்பரையினர் மூலவளம் குறைந்த தமிழ்ப்பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் பேசும் மக்களில் மேல்மட்ட வகுப்பினர் ஆங்கிலேயரது கல்வித்திட்டத்தை ஏற்று அரச நிர்வாக பொறியமைவில் அலுவர்களாகப் பதவி பெற்றனர் ஆங்கிலேயரின் மூலதனமானது இங்கிலாந்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு இங்கு முன்னெப்போதும் இல்லாதவாறு தொழில் துறைகளில் ஈடுபடுத்தப்பட்டது. (ஏகாதிபத்தியத்தின் ஊற்றுக்காலே, இதுதான்) இம்முதலீடுகள் இங்கு முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு தூண்டுகோலாக அமைந்தன.

ஆங்கிலேயரது வணிக நோக்கை நடைமுறைப்படுத்துவதற்கு அரசியல் சமூகப் பொருளாதாரத்தில் புதிய அமைப்புக்கள் தோற்றுவிக்கப்பட்டன. முதலில் கோப்பியும் அதன் அழிவின் பின்னர் தேயிலைப் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையும் மேற்கொள்ளப்பட்டது, ஏராளமான நிலப்பரப்பில் நிலத்தோட்டம் தொடங்கியது கட்டுமீறிய வரி விதிப்பின் காரணமாக வரியைச் செலுத்த முடியாத கண்டிய சிறு விவசாயிகள் தமது காணிகளை இழந்தனர். சுவீகரிக்கப்பட்ட இக்காணிகள் பெருந்தோட்டங்களாயின இவற்றில் வேலை செய்வதற்கு, தென்னிந்தியாவின் பிற்பட்ட கிராமங்களிலிருந்து வறுமையில் வாடிய தமிழர்கள் குறைந்த கூலியில் புதிய "கூலி அடிமைகளாக" இங்கு கொண்டு வரப்பட்டனர். இங்கு "லயம்" எனக் கூறப்படும் நெருக்கடிமிகுந்த, அடிப்படை வசதிகள் மிகக் குறைந்த வதிவிடங்களில் அடைக்கப்பட்டனர். காலையிலிருந்து மாலைவரையும் ஆண்களும் பெண்களும் மிகக் கடினமான வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர் இவர்கள் கிராமங்களில் வசித்த சிங்கள விவசாயிகளுடன் சேர்ந்து வாழ்வதற்குக்கூட அனுமதிக்கப்படாத இயந்திரமனிதர்களாக வாழ்ந்தனர். இவர்களிடையே மொழி கலாச்சார – வேறுபாடுகள் இருந்தன. வெளியே தனது சொந்த நிலத்தை இழந்த சிங்கள விவசாயியோ ஒருவேளை உணவுக்கு கஷ்டப்பட்டான். வாழவே முடியாத நிலை அவனுக்கு ஏற்பட்டது. இந்நிலைப்பாடு தமிழ் இன எதிர்ப்புணர்வாக பரிணமித்தது. தனிச்சொத்தற்ற, கூலிக்காக தமது உழைப்பை விற்ற, ஒரே தொழில்த்துறையைக் கொண்ட இவ்வுடலுழைப்புத் தமிழ்ப் பாட்டாளிகளும் சிங்கள சிறு விவசாயிகளுக்குமிடையில் கூட்டுஉறவு ஏற்படுவதை பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட ஆங்கிலேய, கண்டிய சிங்கள மேலாதிக்க வர்க்கத்தினர் விரும்பவில்லை. தமது பிரித்தாளும் தந்திரத்திற்கு சிங்கள சிறு விவசாயிகளிடையே ஏற்பட்ட இன எதிர்ப்பு உணர்வை தமக்கு சாதகமாக்கிக் கொண்டனர்.

இதேவேளை வட, தென்னிந்தியப் பகுதிகளிலிருந்து வர்த்தகர்கள் இங்கு குடியேறினர். இவர்கள் இங்கு வர்த்தக நிலையங்களையும் கடன் கொடுக்கும் சிறிய வங்கியமைப்புகளையும் உருவாக்கினர். உதாரணமாக :- நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் போரா, சிந்தி வர்த்தகர்கள் போன்றவர்கள் இவர்கள் வாணிபத்தில் மேலாதிக்கம் பெற்றனர். வடக்கு மாகாணங்களின் தமிழர்கள் அரசநிர்வாகத்திலும் சிறியளவில் வர்த்தகத்திலும் ஈடுபட்டனர் அப்போதுதான் முளைவிட்டுக் கொண்டிருந்த கரையோரச் சிங்கள முதலாளித்துவ வர்க்கத்தினர், இந்தியாவிலிருந்து வந்த தமிழர்களும் இம்மண்ணின் மைந்தர்களாகிய தமிழர்களும். தமது சொந்த வளர்ச்சிக்கு தடைக்கல்லாக, சவாலாக இருப்பதாக உணர்ந்தனர் இதனால் ஆங்கிலேயரைப் போன்றே தமிழர்களும் அந்நியர்கள் என்ற நோக்கு எழுந்தது. தமது பிற்பட்ட நிலைக்கு அந்நியர்களே காரணிகள் என்ற கோஷம் எழுந்தது பொருளாதாரப் பிண்ணியை அடிப்படையாகக் கொண்ட சிங்கள தேசியப் பெருமித உணர்வு சிங்களத் தேசிய வாதமாக புதிய வடிகாலைத் தேடியது. இதற்கு ஆதரவு அளித்தவர்கள் சிங்கள மேலாதிக்கத்தினர். இம்முரண்பாடு உள்ளீடாக இருந்த போதிலும் தமது மேலாதிக்கவர்க்க நலனைப் பாதுகாப்பதற்காக தமிழ் மேம்பாட்டு வகுப்பினர், இவர்களுடனும், ஆங்கிலேயருடனும் இணக்கமாகவே சரசமாடினர். இப்படியாக இலங்கையின் முதலாளித்துவ வளர்ச்சியினூடாக தேசிய இனப்பிரச்சனையும் வளர்ந்து வந்தது. இந்நிலைப்பாடு இலங்கையின் சமுதாய அமைப்பில் சிக்கலான நிலையை உருவாக்கியது.

இலங்கையின் சிங்கள தேசிய முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு தடைக் கல்லாக இருந்தவை யாவுமே அந்நியமானவை என்ற கருத்து வளர்ந்தது. இக்கருத் தோட்டம் சிங்கள பௌத்த மறுமலர்ச்சி இயக்கமாக உருவெடுத்தது. இதற்குச் சான்றாக வண அநாகரீக தர்மபால போன்ற பௌத்த குருக்களின் கூற்றுக்கள். பலாத்காரமாகப் பிணைக்கப்பட்ட அரசுகளின் தமிழ் சிங்கள மக்களிடையே உள்ளீடாக இருந்த முரண்பாடு வெளிவர ஆரம்பித்தது. ''பௌத்த மறுமலர்ச்சியின்'' விளைவாக பௌத்தமதப் பின்னனியைக் கொண்ட பாடசாலைகளும் நிறுவப்பட்டன. அதேவேளை தமிழ்ப் பகுதிகளில் அந்நிய கலாச்சாரம், மதம் ஆகியவற்றிற்கான எதிர்ப்புணர்வு ''சைவ சமய மறுமலர்ச்சியாக'' உருவாகியது. இங்கும் சைவ சமயப் பாடசாலைகள் உருவாகின.

சிங்கள மக்களிடையே அந்நியமானவற்றை எதிர்க்கும் மனப்பாங்கு முதலில் சிறுபான்மையினரான தமிழ் பேசும் முஸ்லீம் வர்த்தகர்களுக்கெதிராக திரும்பியது. கொழும்பில் வர்த்தக நிலையங்களில் உடமையாளராகவிருந்த சிங்கள முஸ்லீம் வர்த்தகர்களிடையே ஏற்பட்ட வர்த்தகப்போட்டி சிங்கள முஸ்லீம் இனக்கலவரமாக 1914 இல் வெடித்தது. இக்கலவரம் மிகக் கொடூரமான முறையில் ஆங்கிலேய அரசினால் ஒடுக்கப்பட்டது. [இனக்கலவரத்தை அடக்குவதற்கு ஆங்கிலேயரின் கீழிருந்த பஞ்சாப்படைப்பிரிவு இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது. இன்றும் சிங்கள மக்களிடையே இப்பயப்பிராந்தியுண்டு] தமக்கு எதிராகத் சிங்கள தேசிய முதலாளித்துவ வர்க்கம் எழுச்சியுறுவதைக் கண்ட ஆங்கிலேய ஏகாதிபத்தியம் அவர்களில் சிலரை சிறையிலடைத்தது. *Don Pedris* என்ற சிங்கள காவல்படையைச் சேர்ந்தவன் ராஜத் துரோக குற்றஞ் சாட்டப்பட்டு கொல்லப்பட்டான். இங்கிலாந்து சென்று இவர்களின் விடுதலைக்காக போராடியவர்களில் முதன்மையானவர், தமிழ் முதலாளித்துவ நிலப் பிரபுத்துவ வர்க்கத்தினரின் பிரதிநிதியாக விளங்கிய சேர். பொன் இராமநாதனவார். இவர் தமது வர்க்கநலன் அடிப்படையில் தொலைநோக்கற்றவராக செயற்பட்டார். (எனினும் பின்னர் சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழ் பேசும் மக்களுக்கெதிராக ஒட்டு மொத்தமாகத் தலையெடுத்தது) ஒரு வரலாற்று உண்மையாகியது எனினும் பின்னர் ஆங்கிலேய காலனித்துவத்தின் பிடியிலிருந்து இலங்கை ''சுதந்திரமடைந்தது'' இது தமிழ், சிங்கள மக்களிடையே தேசிய முரண்பாட்டை வெளிக்கொணர்ந்து கூர்மையடைய வைத்தது. இரு தேசிய இனங்களும் தமது முரண்பாட்டை ஸ்தூலமாக எழுந்த நிலைமைகளின் பின்னனியில் உணர்ந்து கொண்டனர். பேரினவாதத்தின் முதல் அடி, மலையகத் தமிழ்ப் பாட்டாளிகளுக்கு எதிரானது இந்திய - பாகிஸ்தானிய பிரஜா உரிமைச்சட்டத்தின் விளைவாக இவர்கள் நாடற்றவர்களாயினர். இவர்களின் அரசியர் உரிமைகளும் மறுக்கப்பட்டன. தமிழர்களின வலிமைமிக்க இப்பாட்டாளிகள் அரசியல் நீரோட்டத்திலிருந்து தனிமைப் படுத்தப்பட்டனர்.

வளர்ச்சியடைந்து வந்த சிங்கள தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின ருக்கு விற்பனைப்பண்ட உற்பத்திக்காகவும், சந்தைப் படுத்தலுக்காகவும், விற்பவனுக் கும் வாங்குபவனுக்கும் இடையே வணிக உறவுகளை மேம்படுத்துவதற்கும், சுதந்திர மான விரிவான வணிக நடவடிக்கைகளுக்காகவும் ஒரே மொழி பேசுகின்ற அரசியல் ரீதியாக ஐக்கியப்படுத்தப்பட்ட நிலப்பரப்புக்கள் மிக அவசியமாகியது. காலனித்துவ காலத்தில் ஆங்கிலமும் சமகாலத்தில் சிங்களமும் புகுத்தப்பட்டதன் பின்னனி இதுதான் முதலாளித்துவத்திற்கு உச்ச லாபம்தான் குறிக்கோள். எனவே தமிழ்த் தேசிய இனம் தனது சிறப்பியல்புகளை இழக்கவைக்கு முகமாக மொழி, கலாச்சார, பொருளாதார ஒடுக்குமுறை மேற்கொள்ளப்பட்டது. தொடர்ச்சியான இனக்கலவரங்கள் காரணமாக வும், சிங்களக் குடியேற்றங்கள் காரணமாகவும், பாரம்பரிய பிரதேசங்களில் இருந்தும் தமிழ் பேசும் மக்கள் விரட்டப்பட்டனர்.

பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராக தமிழ்த் தேசியத்தலைமை பல்வேறு காலகட்டங்களிலும் மேற்கொண்ட மென்முறையை அடிப்படையாகக்கொண்ட சத்தியாக் கிரகப் போராட்டங்கள் பலாத்காரமாகவே அடக்கப்பட்டன. பேச்சுவார்த்தைகள் ஒப்பந்தங்கள் வஞ்சகமாக, துரோகத்தனமாக கிழித்தெறியப்பட்டன, அல்லது செயல் படுத்தப்படாது வெறும் வார்த்தை ஜாலங்கள் ஆகின, நீண்ட தொடர்கதைகள் இவை.

தமிழ்த் தலைவர்கள் சலுகைகளுக்காக அமைச்சரவையில் சேர்ந்து செயல்ப்பட்டனர். பிரதேச சபைகளை உள்ளடக்கிய பண்டா - செல்வா ஒப்பந்தம்; தமிழ்மொழி உபயோகிப்பிற்கான டட்லி - செல்வா ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன. சிங்கள இன வெறியர்களின் எதிர்ப்பின் காரணமாக இவை கிழித்தெறியப்பட்டன. சிங்கள அதிகார வர்க்கத்தினரிடையே ஏற்பட்ட அரசியல் அதிகாரப் போட்டியின் விளைவே இந் நடவடிக்கையாகும். பலப் பிரயோக ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கு மென்முறையை அடிப்படையாகக் கொண்ட அகிம்சைப் போராட்டங்கள் பலனளிப்ப தில்லை. இவ்வரசியல் போராட்டங்களின் உச்சகட்டமாக தவிர்க்கவே முடியாத வகையில் எழுந்தது தான் தமிழ் இளைஞர்களதும் ஒருசில யுவதிகளின் ஆயுதப் போராட்டம். தாங்கமுடியாத ஒடுக்குமுறையே ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் ஊற்றுக்கால்.

பேரினவாத ஒடுக்குமுறையின் அதிக பாதிப்பை அடைபவர்கள் இளைஞர்கள் தான். இவர்கள் கொரில்லாப் போர்முறையை முன்னெடுக்கிறுர்கள். இவ் வாயுதம் தாங்கிய போராட்டம் தேசிய மற்றும் சர்வதேசிய கவனிப்பை பெற்றுவரு கிறது. நேச சக்திகளது ஆதரவைப் பெறுகிறது. இது முற்போக்கானது, புரட்சிகர மானது. தமிழ்பேசும் மக்களது பல்வேறு வர்க்கங்கள், சாதிகள், மத சமூகக் குழுக்களை இணைத்துள்ளது. மக்களை விழிப்படைய வைத்துள்ளது. தமிழ்பேசும் மக்களது உள் முரண்பாடுகளை களைவதற்கான நடவடிக்கையாகவும் அமைந்துள்ளது. நெருக்கடிகள் தேவைகளை உருவாக்குகின்றன. தேவைகள் மக்களை ஒன்று குவித்து கூட்டுமொழ்க்கையின் சிறப்பை யதார்த்தமானதாக்குகிறது. எனவேதான் தேசிய விடுதலைப் போராட்டத்தி னூடாக ''புரட்சிகர சோசலிசத்திற்கான'' நிர்மாணப் பணிகள் சமுதாய மாற்றத்திற் கான வழிகள் போன்றவை திறக்கப்படுகின்றன.

நிலைமைகளுக்கேற்பவே திண்ணமான அரசியல் சமூக பொருளாதார முடிபுகள் எடுக்கப்படவேண்டும் என்னும் அவா மக்களிடம் ஏற்படுகிறது மக்களும் விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு முனைகளைப்பற்றி சிந்திக்கவும் அவற்றுடன் தாமாகவே இணைந்து செயல்படவும் வைத்துள்ளது. கொரில்லாத் தாக்குதல் மேற்கொள்ளப்படும் போது தோற்றுப்போகும் விரோதி தன்னுற்றமை காரணமாக மூன்றுவித அழிவுகளை மேற்கொள்கிறான். "எல்லாவற்றையும் கொள்ளையிடு, எல்லாவற்றையும் அழி, எல்லோரையும் கொல்லு" மக்களைப் போராளிகளிடமிருந்து அந்நியப்படுத்துவதற்காகவே இதைச் செய்கிறான் ஆனால் அதில் அவன் தோல்விகண்டே விடுகிறான் பாரிய பாதிப்புக்கள், இழப்புக்களை ஏற்படத்தான் செய்கின்றன. என்றாலும் மக்களிடமிருந்து போராளிகள் தனிமைப்படவில்லை. மாறாக போராளிகளை வழங்கும் ஊற்றுக் கண்ணாக, நெறிமுறைப்படுத்துபவர்களாக மக்கள் இன்றுள்ளனர். எனவே ஆயுதம் தாங்கிய இவ்விடுதலைப் போராட்டம் மக்கள் மயப்பட்டுக் கொண்டிருக்கிறது எத்தனையோ இடர்களுக்கு மத்தியிலும் மேலாதிக்க இனவெறிபிடித்த சிங்கள அரசுக்கு இந்நிலைப்பாடு மேலும் புதிய சிக்கலான புலப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது.

இனவெறிபிடித்த சிறீலங்காவின் சிங்கள மக்கள் இன்று பல்வேறு பொருளாதாரப் பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர். சர்வதேச நாணய சபை [IMF], உலகவங்கி [IBRD] போன்ற முதலாளித்துவ பின்னணியைக் கொண்ட நிதி நிறுவனங்களின் அடிவருடியாக இன்று சிறீலங்கா இனவெறி அரசு மாறியுள்ளது. அரசினது பொருளாதாரக் கொள்கைகள், மக்கள் பிரதிநிதிகளால் அல்ல, இவ்விரு நிதி நிறுவனங்களின் மூலமே நிர்ணயிக்கப்படுகின்றன நாணயப் பெறுமதிக் குறைப்பு சமூகநல மானியங்கள், விவசாய ஊக்குவிப்பு மானியங்கள். கட்டுப்பாடற்ற சுதந்திர சந்தை, அரச நிறுவனங்கள் தனியார்துறையிடம் ஒப்படைக்கப்பட்டமை. வரிவிதிப்பு முதலியவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம் தேயிலை றப்பர், தெங்கு என்பவற்றின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்துள்ளது. அந்நிய முதலீடுகள், சமூகப் பொருளாதார உள்ளமைப்பில் நிலைகளும்பலே. பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வாழ்க்கைச் செலவுப்புள்ளி முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்து கொண்டே போகிறது பணவீக்கமும் கட்டுப்பாடற்ற பொருளாதார திட்டமிடலும் அராஜகமான வருமான வேறுபாடுகளை அதிகரித்துள்ளது. அதிக வருமானம் பெறுவோர். குறைந்த வருமானம் பெறுவோர் என்பவர்கட்கிடையேயான இடைவெளி பெருகிக்கொண்டே செல்கிறது இதனால் வாழ்க்கைத்தர மேம்பாடு ஒருசிலருக்கே அதாவது உயர் வருமானம் பெறவோருக்கே கிடைக்கிறது மற்றையோர் வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே தள்ளப்படுகின்றார்கள் நிச்சயமாக சமூகக் கட்டமைப்பையே சிதறவைக்கும் நிலையை இது உருவாக்கும் 7% மாக உள்ள பணவீக்க மட்டம் உண்மையான கூலிப் பெறுமதியின் குறைநிலையை ஏற்படுத்தியுள்ளது. அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களது சம்பளம் கூட்டப் பெற்றாலும். பணவீக்கத்தால் அந்நன்மை அவர்களைச் சென்றடையவில்லை தேசிய கைத்தொழில்கள் முடங்கியுள்ளன கட்டுப்பாடற்ற ஆடம்பரப் பொருட்களின் இறக்குமதியால் வந்த பின்விளைவே இது. உதாரணமாக உள்ளூர் துணிகளுக்குப் போட்டியாக அந்நிய ஆடம்பரத் துணிகள் (இவை எமது காலநிலைக்கு ஒவ்வாதவை) இறக்குமதி செய்யப்பட்டு சந்தையில் விடப்பட்டமையால், உள்ளூர் உற்பத்தித் துணிகள் தேங்கியுள்ளன முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் போது இவை ஏற்படுகின்றன. தவிர்க்கவே முடியாதபடி செல்வக்குவிப்பு ஒரு சிலருக்கும், சுரண்டப்படுவதற்கே என்றுள்ள மக்கள் பெரும்பான்மையினராவதற்கும் இது வழிவகுக்கும். முதலாளித்துவமே பாட்டாளி வர்க்கத்தை உருவாக்கி அவர்களாலேயே தனது சொந்த அழிவையும் உருவாக்குகிறது.

ஆனல் பிரச்சனைகளிலிருந்து மக்களைத் திசைதிருப்ப விசுவரூபம் எடுத்துவரும் பொருளாதாரப் பிரச்சனையை பற்றிய உண்மையான நிலைப்பாட்டை சிங்கள மக்கள் உணருவதினின்றும் தடுக்க "பேரினவாதம்" அரசினுல் வளர்க்கப்படுகிறது. இது தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்புக்குள்ளாகும் போது அவ்வெதிர்ப்பு 'பயங்கரவாதம்'' என்னும் பூச்சாண்டிப் பொய்மைத் தோற்றத்தினுல் அரசினுல் சித்தரிக்கப்படுகிறது. போர்ப்பீதி சிங்கள மக்கள் மத்தியில் ஊட்டப்படுகிறது. "தமிழ் பேசும் மக்கள் அந்நியர், அவர்கள் இங்கு வந்து குடியேறியவர்கள், அவர்கள் விரட்டப்பட வேண்டியவர்கள், இவர்களைப்போலவே தமிழ் பேசும் முஸ்லிம்களும் விரட்டப்பட வேண்டியவர்கள், வரலாறு தோற்றுவிட்ட பொற்காலத்தை மீண்டும் அடைந்து ஆரிய சிங்கள பௌத்த சுபீட்சமடைவோம்". என்கின்ற கோஷங்கள் முன்வைக்கப்படுகின்றன பேரினவாதிகளே! வாலாற்றின் சக்கரம் பின்னேக்கி சுழற்றப்படுவதில்லை, இயங்கியல் ரீதியாக சமுதாயம் முன்னேக்கியே வளந்துவரும்; சமுதாய வளர்ச்சி, திரும்பத் திரும்ப நிலையான புள்ளியை மையமாகக்கொண்டு சுழல்வதில்லை இத்திசை திரும்பல் அரசாங்கத்தின் உள் முரண்பாடுகளையும் வளர்த்து வருகிறது நிதி அமைச்சர் கூறியுள்ளார், "நாம் இந்நிலையை நீடிக்கவிடக்கூடாது. உல்லாசப் பிரயாணத்தினின்றும் வரவு ஏற்கனவே குறைந்துள்ளது. அந்நிய முதலீடுகள் குறைந்துள்ளன. அந்நிய நிதி உதவியைப் பெறுவது கடினம் உற்பத்தியும் ஏற்றுமதியும் பாதிப்படைந்துள்ளன". இனக் கலவரத்தின் போது ஏராளமான தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டன. மேலும் அந்நியச் செலாவணி ஈட்டித்தந்த மீன்பிடித்தொழில் (தமிழ்ப் பிரதேசங்களில்) வடக்கு கிழக்கு கரையோரங்கள், பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டதால் பாதிக்கப்பட்டுள்ளது இத்தனைக்கு மத்தியிலும் பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு அதிகரித்துள்ளது மற்றைய அவசிய ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பிற்கான நிதி ஒதுக்கீடு 1977 இலும் பார்க்க தற்போது 7 மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. இராணுவ செலவீனங்களுக்காக பட்ஜெட் ஒதுக்கீட்டைவிட குறைநிரப்பு பிரேரணைகள் மூலமாகவும் நிதி ஒதுக்கப்படுகிறது தேசிய பாதுகாப்பு நிதி என்ற போர்வையில் சிங்கள மக்களிடமிருந்து "பயங்காவாத" பூச்சாண்டியைக்காட்டி நிதி கறக்கப்படுகிறது மறை முகவரிகள் அதிகரிக்கப்படுகின்றன. இவற்றின் சுமையால் பாதிக்கப்படுபவர்கள் உண்மையை அறியாத சிங்கள பாட்டாளி வர்க்கமும் சிறு விவசாயிகளும்தான் தமிழ் பேசும் மக்களை ஒடுக்குவதற்கான சட்டமூலங்கள் இப்போது சிங்கள மக்களை நோக்கித் திரும்பியுள்ளன. பல்கலைக்கழக திருத்தமசோதா வசதியுள்ள மாணவருக்கே கல்வியைப் பெற வாய்ப்பளிக்கும். இதனை எதிர்த்த சிங்கள மாணவர்கள் வன்முறை மூலமாக நொறுக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். ஊதிய உயர்வு கேட்டு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் காடையர்களால், பொலிசாரால் தாக்கப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

சிங்கள இடதுசாரி இயக்கங்கள் பல பிரிவுகளாக உட்பகைகளுடன் விளங்குகின்றன. வெறும் பேச்சளவில் மட்டும் இவர்கள் இயங்குகிறார்கள். ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவற்றிலும் இறங்குவதில்லை. இது குட்டி முதலாளித்துவ சந்தர்ப்பவாத தன்மையின் நிலைப்பாட்டை அப்பட்டமாக வெளிக்கொணருகிறது. இன்றைய புரட்சிகர சூழ்நிலையின் பரிமாணங்கள் இவர்களுக்கு தென்படுவதில்லை. இவர்களிடையே அதிகாரப் போட்டியே தலைதூக்கியுள்ளது. என்றாலும் தமிழ் விடுதலைப் போராளிகளின் பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக ஒரு சில சிங்கள முற்போக்கு சக்திகள் நிலைமையின் தாற்பாரியத்தை உணருகின்றனர். இவர்களின் பங்களிப்பு இவர்களது சிங்கள அதிகார முதலாளித்துவ அதிகார வர்க்கத்தினருக்கு பலத்த சவாலாக உள்ளது. இந்நிலைப்பாடு மேன்மேலும் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். சிறீலங்காவின் எதிர்காலம் இவர்களின் கையிலேயே உள்ளது எமது நேசக்கரங்களை நீட்டி நாம் அவர்களை வாழ்த்துகிறோம். எமது ஆதரவையும், ஆக்கபூர்வமான செயல்பாட்டையும் அவர்களுக்கு நாம் வழங்க உறுதி பூண்டுள்ளோம்.

அதேவேளை தமிழ் பேசும் மக்களது இன்றைய நிலைமை, படுமோசமான பாதிப்பு. அவர்களை சுதந்திர சுய இறைமையுள்ள மதசார்பற்ற சோஷலிச தமிழீழம் நோக்கியே இட்டுச்செல்கிறது. இன ஒடுக்குமுறையின் பல்வேறு பரிமாணங்களையும் அறிந்தும் அறியாமலும் துணைபோகின்ற சிங்கள மக்கள் விழிப்படையுமட்டும், தமிழ் பேசும் மக்கள் காத்திருக்கமுடியாது. பேரினவாதம் இன அழிப்பை வெற்றிகரமாக செயற்படுத்தி விடுமளவுக்கு நாம் பொறுத்திருக்க முடியாது. என்றாலும் நிலைமையில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. அரசியல் மாற்றங்கள் மட்டும் தமிழ் பேசும் மக்களது அபிலாசைகளை பூர்த்திசெய்துவிடப் போவதில்லை. சிறீலங்காவின் இடதுசாரிகளது கோஷமாகிய பாட்டாளிவர்க்க ஒருமைப்பாடு பேரினவாதத்தின் முன்னே எடுபடவில்லையென்பது முக்கியமான யதார்த்த உண்மை. தமிழ்ஈழப் போராட்டம் குறுகிய நோக்குக்கொண்ட தேசியவாதம் அல்ல. பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் முன் தேவைகளையும் முன்வைத்தே நாம் எமது பாதையை மிக்க கவனத்துடன் ஆய்வுசெய்தே தேர்ந்துள்ளோம். தமிழ் ஈழப் போராட்டம் ஏகாதிபத்தியத்தின் விஸ்தரிப்பிற்கு எதிரானது. பொருளாதார ஆக்கிரமிப்பின் வடிவமாகிய தவகாலனித்துவத்திற்கு எதிரானது, என்பது சிங்கள அதிகார வர்க்க அரசிற்கு எவ்வந்நிய சக்திகள் துணை போகின்றன என்பதிலிருந்து தெரியவந்துள்ளது. இனவெறித் தென்னாபிரிக்கா, சயோநிச இஸ்ரேல், காலனித்துவ மேற்கு நாடுகள், ஏகாதிபத்தியத்தின் தனிப்பெருங் காவலனும், தனது தேசிய நலன்களை தனது தேசிய எல்லைகளைக் கடந்த சர்வதேச ரீதியிலானது என்ற கேலிக்குரிய மேலாதிக்க வெறிபிடித்த அமெரிக்கா, இலங்கையில் சந்தைபிடிக்கும் வர்த்தக நோக்குக்கொண்ட சில தென்கிழக்காசிய நாடுகள் முழு நாட்டையுமே இராணுவ ஆதிக்கத்திற்குக் கீழ் கொண்டு வருவேன் எனப் பொதுமேடையிலே முழங்கும் புதிய பாசிச பிரகிருதி J. R. இன் அரசிற்கு நிதி, இராணுவ உதவி அளிப்பதன் உள் நோக்கமும் பட்டவர்த்தனமாக வெளிவந்துள்ளது.

எமது போராட்டம் வெற்றியடைவதன் மூலமே சிறீலங்கா பாட்டாளி வர்க்கம் விவசாயிகள் ஆகியோருக்கும் விடிவுகால நட்சத்திரமாக இருக்கமுடியும். அவர்களின் நியாயமான போராட்டமும் வெற்றிபெறுமாயின் இரு தேசங்களும் பரஸ்பர நம்பிக்கை, பொருளாதார கலாச்சார பரிவர்த்தனை, சமாதான சகவாழ்வு என்னும் மனிதநேயக் கோட்பாட்டு ஆகியவற்றின் அடிப்படையில் சர்வதேச ரீதியிலான சமுதாய மேம்பாட்டிற்கு வழிகாட்டியாக விளங்கமுடியும். எமது போராட்டம்; இந்து சமுத்திரப் பிராந்தியத்தை, சமாதான நல்லுறவுப் பிராந்தியமாக்குவதற்கான போராட்டம், அணுஆயுத அச்சுறுத்தலை வென்றெடுக்கும் போராட்டம், ஒடுக்கப்படும் மக்களை அரவணைக்கும் போராட்டம், ஏகாதிபத்தியம், காலனித்துவம் என்றும் சமுதாய ஒட்டுண்ணிகளை அழிக்கும் போராட்டம், மூன்றும் உலக நாட்டு மக்களின் மேம்பாட்டிற்கான போராட்டம், என்ற சர்வதேசப் பரிமாணங்களையடைந்து சர்வதேச முற்போக்கு சக்திகளின் ஆதரவை மேன்மேலும் பெற்றுவருகிறது.

**வெல்க தமிழ் ஈழப் போராட்டம்!**

**வாழ்க சர்வதேச சமாதான சகவாழ்வு!**

# சிந்திக்க மறுப்பதேன்?

சிந்தையிருந்தும் சிந்திக்க மறுப்பதேன்
என்னருமைப் பெண்ணினமே
பந்தியிலே நிறுத்தியவர் பெண்மையினை ஏன்!
என்று பரிகாசம் செய்கிறரே
இந்தப்பாரின் படைப்பினிலே எவ்வுயிர்க்குமில்லை
இவ்விழி நிலை கண்டுநீரும் காணுததுபோல்
சிந்தையிருந்தும் சிந்திக்க மறுப்பதேன்
என்னருமைப் பெண்ணினமே.

பந்தைக் கடையில் வாங்கக் குழந்தை
பத்துக் காசு கொடுக்கணுமே
எந்தையினம் தொண்டு செய்ய
பணம் கொடுத்துப் பெண் கொடுக்கணுமாம்
விந்தையிங்கு பெண்கள் நிலையின்று
இந்த நிலை கண்டு நீரும் காணுதுபோல்
சிந்தையிருந்தும் சிந்திக்க மறுப்பதேன்
என்னருமைப் பெண்ணினமே.

சிந்தைச் சிறகடித்து நன்ருய் அறிவுலகைச்
சுற்றிவந்து பெண்ணிலை உயர்ந்து நீரும்
இந்த நிலை நன்றல்ல மாணமுள்ள மங்கையர் நாம்
எதிர்க்கின்ருேமிதை வன்மையாக என்றுரைத்து
சொந்த விருப்பு வெறுப்புகளை நீக்கி நாமும்
துணிந்திடுவோம் மங்கையர்தம் மதிப்புயர்த்த
வந்திடுவோம் உயர் கிளைக்கு ஒன்றுகூடிப் பேடுகள் நாம்;
துணிந்து நம் கிளைக்கருகே வந்திட்ட சேவலையே சேர்த்திடுவோம்.

எழுந்திடுவீர் என்னுரை கேட்டுச் சுணங்காமல்
பெண்மையினை இழிவுசெய்யும் பேயர்க்குப் புத்தி புகட்டிட
விழுந்து கிடந்து மண்டியிட்ட காலம் போய்விட
விரைந்து வந்திடுவீர் வீரப் பெண்களே
கொழுந்து விட்டுச் சுடர்வீசி ஒளி கொடுக்க
கைகோர்த்து விடுதலைக்களம் காணவே
கிளர்ந்தெழுந்து அணிதிரண்டு வாரீர் பெண்களே
பெண்ணுரிமை காத்து பொன்னீழம் அமைத்திடுவோம்.

# வடமராட்சியின் மூலவளங்கள்

ஒரு நாட்டின் சுபீட்சமே அந்நாட்டின் அபிவிருத்தியிலேயே தங்கியுள்ளது "அபிவிருத்தி" என்ருல் என்ன? பொருளாதார சனத்தொகை காரணிகளில் மட்டுமன்றி, சமூகம், பண்பாடு ஒழுக்குநெறி ஆகிய காரணிகளிலும் மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்படுகின்ற ஒரு செயன்முறையாகும் எனவே நாட்டின் அபிவிருத்தியின் ஓரம்சமே பொருளாதார முன்னேற்றம். பொருளாதார முன்னேற்றம் என்பது ஒரு நாட்டிலே பொருளுற்பத்தி வாயிலாக பொருளாதாரத் துறையில் ஏற்படுகின்ற அதிகரிப்பும், மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்படுகின்ற அதிகரிப்புமேயாகும் எனவே தேசிய உற்பத்தியை அதிகரித்து நமது நாட்டில் காணப்படுகின்ற ஏழ்மையையும், வேலைவாய்ப்பின்மையையும் ஏற்றத்தாழ்வுகளையும் அகற்றுதல் வேண்டும் இந்த ரீதியில் கைத்தொழில் வளர்ச்சிக்கு வளங்கள் அவசியமாகின்றன. நமது நாடு இயற்கைவளங்கள் நிறைந்த சுபீட்ச பூமி எனவே நமது நாட்டின் முன்னேற்றத்திற்காக, இங்கு காணப்படும் வளங்கள், பயன்படுத்தப்பட வேண்டும். வளங்கள் உற்பத்தியில் பயன்படுத்தப்பட்டு. கைத்தொழில் முடிவுப் பொருட்களாக ஏற்றுமதி செய்யப்படுதலும், தன்னிறைவு அடைதலும் அவசியமாகின்றது.

இந்த வகையில் எமது வடமராட்சிப் பிரதேசத்தில் காணப்படுகின்ற மூலவளங்களையும், அவற்றின் கைத்தொழில் முக்கியத்துவத்தையும் ஆராய முற்படுவோம் நமது வடமராட்சிப் பிரதேசத்தின் வடக்கெல்லையிலும் கிழக்கெல்லையிலும் கடல்வளம் நிறைந்து காணப்படுகின்றது. எனவே கடலிலிருந்து நாம் மீன்வளத்தைப் பெற்றுக் கொள்ளல் அவசியமாகும். இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் மீன்வளத்தில் நமது நுகர்ச்சி தவிர்ந்த ஏனையவற்றை ஏற்றுமதி செய்யலாம். ஏற்றுமதி செய்வதற்காக அவற்றைப் பதப்படுத்துவதற்கு பதனிடும் தொழிற் சாலைகளையும் ஆரம்பிக்கலாம். அத்துடன் பல ஏற்றுமதி முகவர் நிலையங்களையும் அமைக்கலாம். இதன் மூலம் நமது இளைஞர் சமுதாயத்தின் மத்தியில் தாண்டவமாடும் வேலையில்லாப் பிரச்சனையையும் நீக்கலாம். மேலும் தகரத்திலடைத்த மீன்வளத்தை ஏற்றுமதி செய்வதன் மூலம் பல இலட்சம் பெறுமதியான அந்நியச் செலவாணியை நமது நாட்டுக்குப் பெற்றுக் கொள்ளலாம் கடல்வளத்தில் காணப்படுகின்ற, ஆனுல் இன்றும் பயன்படுத்தப்படாத அலை தாவரங்களையும் விலங்குகளையும் பயன்படுத்துதல் வேண்டும். அலைதாவரங்களில் முக்கியத்துவம் வாய்ந்த தயற்றம் (Diatoms) களின் மூலம் நாம் பல கைத்தொழிற் பயன்களைப் பெற்றுக்கொள்ளலாம். இவற்றில் சுவரில்க் காணப்படுகின்ற சிலிக்காவைப் பெற்று வெப்ப அரிதிற் கடத்திப் பொருட்கள் தயாரிக்கும் தொழிமுயற்சியை ஆரம்பிக்கலாம் அத்துடன் இவற்றிலிருந்து பற்பசை, மை போன்றவற்றையும் நாம் தயாரித்துக் கொள்ளலாம். மேலும் கடல்வாழ் தாவரங்களாகக் காணப்படும் அல்காக்களைப் பயன்படுத்தி ஏகார், அல்ஜினிக்கமிலம் போன்ற கைத்தொழில் முக்கியத்துவம் வாய்ந்த பதார்த்தங்களையும் தயாரிக்கலாம். இவற்றுக்காக நாம் நமது பிரதேசத்தில் குடிசை சிறுகைத்தொழில் நிலையங்களையும் ஏற்படுத்திக் கொள்ளலாம். அத்துடன் நமது கடல்வளத்தில் காணப்படுகின்ற பாரிய அல்காக்களான "லமினுரியே". "சாகசம்" போன்றவற்றை வறுத்தெடுத்து கால்நடைகளுக்கு "நிரம்பிய போசனை" உணவைத் தயாரித்துக் கொள்ளலாம் எனவே நமது கடல்வளத்தில் காணப்படுகின்ற கைத்தொழில் மூலவளங்களை நாம் திட்டமிட்டுப் பயன்படுத்தல் வேண்டும்.

நமது பிரதேசத்தில் இயற்கைப் பொருளாதாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த அடுத்த மூலவளமாக பனையைப் பற்றியும் அதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் ஆராய்வது சாலச் சிறந்தது எமது பிரதேசத்தின் பனைவளம் மிகச் சிறப்புற்றுக் காணப்படுகிறது. பனையிலிருந்து பெறப்படுகின்ற மிக முக்கிய பயனாக பனைவெல்லம் காணப்படுகின்றது. தற்போது மக்கள் இதனை சிறு குடிசைக் கைத்தொழிலாகவே மேற்கொண்டு வருகிறார்கள். எனினும் இதனை ஒரு கைத்தொழில் வளமாகப் பயன்படுத்துவதன் மூலம் நாம் பன்மடங்கு பயனைப் பெறலாம். இக் கைத்தொழில் நிலையங்களை அமைப்பதற்கு "சிறப்பு வாய்ந்த விஞ்ஞான தொழில் நுட்ப" உபகரணங்கள் அத்தியாவசியமற்றவையாதலால் மூலதனப் பிரச்சனையும் அதிகளவில்க் காணப்படுவதில்லை பனையிலிருந்து பெறப்படுகின்ற, வல்லுருக்களைக் கொண்ட தும்பிலிருந்து கல்நார் தயாரிக்கக் கூடியதாகவுள்ளது. மேலும் பனம்பழத்தைப் பதப்படுத்துவதன் மூலம் சுதேச வைத்திய முறையில் பயன்படுகின்ற சிலவகை மருந்துகளையும் நாம் தயாரித்துக் கொள்ளலாம். அத்துடன் பனை மரமானது தளபாடங்கள், படச்சட்டம் போன்றவை தயாரிக்கப் பயன்படுவதால் தச்சுவேலையை அபிவிருத்தி செய்யக்கூடியவாறுள்ளது. பனையைப்போன்று அனேக பயன்தரக்கூடிய தாவர மூலவளமான தென்னையும் நமது பிரதேசத்தில் காணப்படுகின்றது. இதிலிருந்து குடிவகை, சாயம், வெடிமருந்து, கன்னார்ப்பலகை தூரிகை, எண்ணெய், வெண்ணெய், கொப்பரா, கோழித்தீன் விளுகிற, தலைச்சீரா, காற்றடைப்பம் போன்ற பல பொருட்களைத் தயாரிக்கலாம்.

நமது பிரதேசத்தின் மண்ணானது நீரை உட்புகவிடாத தரைப்பாங்காக் காணப்படுவதால் நாம் நன்னீர் மீன்வளர்ப்புத் திட்டங்களை ஏற்படுத்தலாம். அத்துடன் கடல்வாழ் விலங்குகள் வாழக்கூடிய தடாகங்கள் ஏற்படுத்தி கடல்வள ஆய்வுகளை ஏற்படுத்தலாம். மேலும் நமது கடற்கரையோரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற சுண்ணக்கல் சீமெந்து தயாரிப்பிலும் நீருத சுண்ணும்பு, பீங்கான், ஓடம், புடக்குகைக் தயாரிப்பிலும் பயன்படுத்கப்படலாம். நமது பிரதேசத்தின் குறிப்பிட்ட சில இடங்களில் காணப்படும் களிப்பாங்கான மண், மட்பாண்டத் தயாரிப்பில் அதாவது வனைதற் தொழிலில் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் வல்லிபுரம். அம்பன், குடத்தனை போன்ற பிரதேசங்களில் பெருமளவில்க் காணப்படும் சிலிக்காமண் கண்ணடித் தயாரிப்பிலும், சீமெந்து தயாரிப்பில் சிறிதளவிலும் பயன்படுத்தப்படுகிறது.

மேற் குறிப்பிடப்பட்ட மூலவளங்களுடன், இன்னும் ஆய்வு செய்யப்படாத வளங்களுமிருக்கலாம் இவற்றிற்கான தேட்டங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இயற்கையின் மூலவளங்கள் மனித தேவைகளுக்காக பயன்படுத்தப்படல் வேண்டும். சீரான திட்டமிடலின் கீழ் மூலவளங்களது ஆய்வுகளும், அவற்றைச் சரியான முகாமையின் அடிப்படையில் உற்பத்தியில் பயன்படுத்துவதும், நமது சுயசார்புப் பொருளாதாரத்தை வலுவாக்கி தன்னிறைவை ஏற்படுத்தும். நமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் போராட்டத்தின் பரிணமத்தில் இது ஒரு பாரிய முன்னெடுப்பாக விடங்கும்.

# யுத்த நிறுத்தமும் அன்னியரின் இராஜதந்திரமும்

இன்று தமிழீழ போராட்டம் முக்கிய கட்டத்தை வந்தடைந்துள்ளது. ஆனுல் இனிமேல்தான் களத்தில் நிற்கும் விடுதலை அமைப்புக்கள் கத்திவிளிம்பில் செல்லவேண்டிய எதிர்காலமாகும். ஏனெனில் 10 வருடங்களுக்கு மேலாக முறிவடையாத கொரில்லா யுத்தம் இன்று மக்களுடன் வேரூன்றி வடக்கு, கிழக்கு எங்கும் கேந்திர நிலையங்களை வெற்றிவாகை சூடி வருகையில் அரசு தன்னை அறியாமலேயே மொசாட், பிரித்தானிய விமானப் படைச்சேவை, அமெரிக்கா என்பவற்றை விட்டு இந்தியாவிடம் சரணடைந்துள்ளது. பல சோதனைகளையும், வேதனைகளையும் கடந்து தியாகமே உருவான இயக்கம் மக்களின் இயக்கமாக பரிணமிக்க முடியுமென்பது நாம் நடைமுறையில் தமிழீழத்தில் காண்கின்றோம். இதற்கிடையில் சில சுயநலக் குழுக்கள் தம்மை பாரிய இயக்கமாக்கி கற்பனைகளை மக்கள் மத்தியில் கவர்ச்சிகரமாக பரப்பி களத்தில் இறங்காமல் உயிர் வாழ்கின்றூர்கள். இவர்களையும் மக்களால் இனம்காண முடிந்துள்ளது. நடைமுறையிலும் சித்தாந்தத்திலும் உறுதியான நம்பிக்கை கொண்ட சில நல்ல இயக்கங்கள் இன்று நடைமுறை உண்மையை அறிந்து களத்தில் இறங்கியுள்ளன. இது தமிழ் மக்களின் விடிவிற்கு மேலும் வலுவூட்டுகிறது. மாநிலசுயாட்சி. அதிகார பரவலாக்கல் என்ற கோசங்களுடன் 30 வருடங்களாக கோசமிட்டே தமிழ் மக்களை ஏமாற்றி இன்று உல்லாச பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டோர் தமிழ் மக்களிடையே இன்று நிலவும் உணர்வு பூர்வமான சுதந்திர தாகத்தை மழுங்கிடச்செய்ய வருகைதருவர். மக்களே இவர்களையிட்டு விழிப்பாக இருங்கள். யுத்தம் புரிந்த தமிழினம் யுத்த நிறுத்த நாட்களில் தம்மை பூரணமாக தயார்படுத்தும் அன்னிய இராஜதந்திரங்கள் அதாவது அரசியல் அயோக்கிய தனங்களைப் புரிந்து கொள்ளல் அவசியம்.

வல்லரசு நாடுகள், வல்லரசாக வளரும் நாடுகளில் முதலாளித்துவ அமெரிக்கா, பிரிட்டன் கம்யூனிச ரஷ்யா, சீனு, அணிசேரா இந்தியா. இலங்கை என்பவற்றை அவதானிக்கையில் எந்த அரசும் சுயமாக நிற்காமல் பல்வேறு இராஜ தந்திரம் மூலம் ஒன்றையொன்று ஏமாற்றுகிறது. முதலாம் உலகயுத்தத்திற்குப் பின் சோவியத் ஒன்றியமும் இரண்டாம் யுத்தத்திற்குப் பின் சீனுவும் கம்யூனிசத்தை உலகுக்கு அறிமுகம்செய்து பாட்டாளிகளின சர்வதேசியத்தின் முதுகெலும்பு ஆகினர். ரஷ்யா சீனு போன்ற நாடுகளின் உதவிகளினுல் கியூபா, நிக்காகுவா, வியட்னும் புரட்சிகர குடியரசுகளை உலகிற்கு அறிமுகம்செய்து வைத்தனர். ஆனுல் சீனு, வியட்னும் பிணக்கு இன்று, உலகறிந்ததே. ரஷ்யாவா, சீனுவா சரியானது என்ற கேள்வி புரட்சிசெய்த இருநாட்டு பாட்டாளிகளினதும் வயிற்றெறிச்சலை கிளப்பும் செயலாகும். ரஷ்ய திரிபு வாதம் என்று பிரிந்து செயற்பட்ட சீனு இன்று முதலாளித்துவ அமெரிக்காவின் கைப் பொம்மையாகியுள்ளது. இம்மாற்றம் மாவோர்வின் காலத்தில் ஏற்பட்ட கலாச்சார புரட்சி யின் போது, பல ரகசிய முதலாளித்துவ பிற்போக்கு வாதிகளுக்கு கருணை காட்டியமையே, புரட்சியைக் கண்ட சீனுவிற்கு சாபக்கேடாய் அமைந்திருக்கலாம்.

[இது தமிழீழ போராளிகளுக்கும் சிலவேளை பொருந்தலாம்.]

சீனு, திரிபு வாதத்தால் வேற்றுமைப்பட்டபொழுது இந்தியா, சீனு பிரச்சனைகளும் ஆரம்பமாகத் தொடங்கின. இந்தியா வளருகின்ற நேரத்தில் ரஷ்யாவின் துணையை இறுக்கமாகப் பெற்று ஆசிய வல்லரசு தானத்தைப் பெற வளரத் தொடங்கியது. 19 வகையான நவீன தளபாடங்களையும், விமானம், கப்பல் போன்றவற்றையும் ரஷ்ய உதவியுடன் பெற்று வளர்ந்துள்ளது. இவ்வேளையில் முதலாளித்துவ அமெரிக்கா ஆசியாவில் வியட்னும், தேசிய சீனு (போர்மோசா) போன்றவற்றை கோட்டைவிட்டு பாகிஸ்தானுடன் யுத்த ஒப்பந்தம் இருந்தும், பாகிஸ்தானிடமிருந்து, இந்தியா பங்களாதேசை பறித்தெடுக்கையில் எவ்வித உதவியும் செய்யாமல் அமெரிக்கா ஒளித்துக் கொண்டமை ஆசியாவில் ஊன்றிய காலடிகள் ஒடிந்துகொண்டு வருவது கண்கூடு. இதனுல் அமெரிக்காவை நம்பிய இலங்கை எந்நேரத்திலும் அமெரிக்காவினுல் கைவிட்ட, கைவிடப்படவேண்டிய நிலை வந்தமையாலும் போராளிகளின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் இந்தியாவிடமே சரணடைவது மேல் என்று முடிவெடுப்பது ஜே. ஆரின் இராஜதந்திரமாகும். மத்திய கிழக்கிலும், மத்திய அமெரிக்காவிலும் சமாளிக்க முடியா தளவு எதிர்ப்பு உயர்வதை அமெரிக்கா தாங்க முடியுமா? சீனுவிலும் யுத்த நவீனமயப் படுத்தலுக்கும், கம்பியூட்டர் தொழில்நுட்ப முக்கியத்துவத்துக்கும், ரஷ்ய, இந்திய உறவின் நெருக்கத்திற்கும் முகம் கொடுக்க வேண்டியதால் அமெரிக்க சீன உறவு நெருக்க மடைகிறது. மார்க்சிய வழியில் வந்த சீனு சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் அதேவேளையில் எமது தமிழீழ போராட்டத்தில் அரசுக்கு பல நவீன ஆயுதங்களை வழங்குதல் புரியாத புதிர்.

தமிழீழப் போராட்டத்தினுல் இந்திய இலங்கை அரசுகளின் உறவு தமிழ் நாட்டு மக்களின் இலங்கைத் தமிழர்பாலுள்ள உணர்வினுல் விரிசல் அடைந்துள்ளது. இலங்கையின் முதலாளித்துவ போக்கின் இயற்கையான அம்சத்தினுல் அமெரிக்கா, மொசாட், S. A. S. போன்றவற்றின் துணையுடன் போராட்டத்தை நசுக்க முற்பட்டு தோல்விகண்டது, நம்பியிருந்த திருகோணமலைக் கேந்திரமும் விடுதலைப் போராளிகளால் தாக்கப்பட்டபோது அமெரிக்காவும் இலங்கையும் ஒரே மனுேநிலையில் நொந்துபோன வேளையில் அமெரிக்க இந்திய உறவுகள் வலுவடைந்து கொண்டிருக்கிறது. இந்தியாவின் நவீன வளர்ச்சிக்கு தேவையான கம்பியூட்டர் தொழில் நுட்பம் அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளிலும் தேவைப்பட, அமெரிக்காவும் வழக்கம்போல வளர்ச்சியற்ற இலங்கையை கைவிட்டுவிட்டு கோடிக்கணக்கான கம்பியூட்டர்களை சந்தைப்படுத்தும் ஆவலினுலும் இந்திய வளர்ச்சியினுலும் இந்தியாவிடம் தனது உறவை மேலும் வலுப் படுத்திக் கொள்கிறது. அத்துடன் அயல்நாடான இலங்கை நெருக்கடியை இந்தியா வரவேற்கவே செய்யும். காரணம் தமிழ்ப் போராளிகளுக்கு எதிரானது என்று இந்தியா கூறுமோ? இந்திய அமைப்பை பொறுத்தளவில் வட எல்லைகளில் நாகலொந்து பஞ்சாப் (காலிஸ்தான்) பிரச்சனை, ஜம்மு கஸ்மீர் பிரச்சனை, பங்களாதேஷ் பிரச்சனை, அஸாம் அகதிகள் பிரச்சனை இதன் காரணமாகவே தென்மாநிலங்களில் முக்கிய யுத்த தளபாட கோட்டைகள் உள்ளன. தமிழீழம் பிரியுமானுல் தமிழ் நாட்டின் நீண்டநோக்கு எப்படி இருக்க முடியும்? அப்படியிருந்தும் தமிழீழம் பிரிகையில் அடுத்து இலங்கை அரசு மேற்கத்தியரை நாடி அங்கிருந்து இந்தியா யுத்த அபாயத்தை எதிர்கொள்ள வேண்டி யிருக்கும் ஆகவே பிரியாமல் தனது விசுவாசத்தின் கீழ் இலங்கை என்ற அரசை இருக்கச் செய்வதற்கு இந்தியா பூரண விருப்பம் கொள்வது இந்திய முதலாளித்துவ அரசிற்கு நியாயமே. ஆரம்பத்தில் இலங்கை அரசிற்கு தமிழீழப் போராளிகளின் மூலம் பல நெருக்கடிகளை வலியவே புகுத்திய இந்திய மத்திய அரசு, இலங்கை அரசை சரணடைய வைத்து தமிழர் முதலாளித்துவ ஏஜெண்டுக்கள் மூலம் போலியான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுத்து இலங்கையின் மதிப்பிற்குரிய எஜமானுகும் ஆசை அம் முதலா ளித்துவ நாட்டிற்கும் ஏற்படுவது இயற்கையே.

இன்று யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டிருக்கும் சகல விடுதலை இயக்கங்களுக்கும் இன்றைய விளைவுகள் எதனால் எப்படி ஏற்பட்டதென்பது வெள்ளிடைமலை. பல ஆண்டுகளாக வளர்த்து வந்த சுதந்திர வேள்வித்தீயை ஐந்து மாதத்திற்குள் நசுக்கி ஒடுக்கி அழித்தொழிப்பதற்கு பாராளுமன்ற அப்புக்காத்துக்கும்பல், இவர்களுக்கு முட்டுக்கொடுக்கும் ஒரு சில பிரமுகர்கள் குறுங்குழு. சில சமூக முதலாளித்துவ அமைப்புக்கள், மக்கள் முன் இனிமேல் தலைநிமிர்ந்து நிற்கமுடியாத இயக்கம் என்பவை பல வழிகளிலும் பல்லாயிரக்கணக்கான தியாகசீலர்களால் சேர்ந்து உருவாக்கப்பட்டு கட்டி எழுப்பப்பட்ட சுதந்திரத்தீயை அணைப்பதற்கு சகல வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்டும், முயற்சித்துக்கொண்டும் இருப்பவர்களை யிட்டும் தமிழ் மக்களாகிய நீங்கள் விழிப்பாயிருங்கள் இவர்களைப் போன்ற சுயநல சக்திகள் முன்னனி இயக்கங்களுக்கு மாசு கற்பிப்பதற்கும் முயற்சிப்பார்கள். இராணுவ கல்லூரி உதைபந்தாட்டம், இராணுவ பொதுமக்கள் நல்லுறவு என்ற போர்வையில் கபட நாடகங்களை பாராளுமன்ற முண்டுகளும், அரச விசுவாசிகளும், போலி நாகரீக வாழ்க்கையை நம்பியுள்ள உயர்மட்டத்தினரும் மேடையேற்ற முயல்வர். இக்குறுகிய சுயநல மனப்பான்மையை கொண்டவர்களை மக்கள் இனங்கண்டு கொள்ள வேண்டும். ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்து அவ் ஆயுதப் போராட்டத்தை வெற்றியுடன் நடாத்தி முடித்த தியாக சீலர்களின் பின்னால் தமிழீழ மக்கள் அனைவரும் ஓரணியில் ஒன்று திரண்டு வேற்றுமைகளைக் களைந்து அனைவரும் விடிவை நோக்கி செல்ல வேண்டும். சுதந்திரம் ஒன்றே எமது வேதவாக்காகும்.

## பெண்ணினமே!

பெண்ணினமே! நீ.... ...........
கண்ணகியாக மாற வேண்டாம்
புன்னகை அரசியாகவும் வேண்டாம்
தீயினில் இறங்கிய சீதையாகவும் வேண்டாம்
சினிமா தந்த ஸ்ரீதேவியாகவும் வேண்டாம்
போதை யூட்டிடும்
நாரிய நங்கையராகவும் வேண்டாம்
இங்கெமக்கு நீங்களெல்லாம்
களங்காணத் துடித்திடும்
புலிக் கூட்ட மறவர்தனை
காத்திடும் வீரப் பெண்களாய்
உருமாறி வந்திட்டால் போதும்.

# "கரையை உடைக்கும் புதிய அலைகள் ......!"

(நாடகம்)

## காட்சி I

இடம்:- சைக்கிளை உருட்டியபடி உரையாடல்

பாத்திரம்:- முரளி, ரவி

இருவரும் நடந்து வருகிறார்கள் முரளியின் சிந்தனையிலே அரசியல்த் தலைவர்களின் உரை ஊர்கிறது.

உரை:- மக்களே! நாம் நமக்கொரு நாட்டை, புதிய ஈழத்தை அமைத்துக் கொள்ள இதுவே நல்ல சந்தர்ப்பம், நீங்கள் என்னிடம் ஐயாயிரம் பேரைத் தந்தால்ப் போதும் நாங்கள் ஆறு மாதங்களில் ஈழத்தை அமைத்திடுவோம். தாய்க்குலமே இது ஆண்ட பரம்பரை நாம் மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் தவறென்ன? உங்களுக்குத் தமிழீழம் வேண்டுமானால் உங்கள் பொன்னான வாக்குகளை எங்களுடைய கட்சிக்கே அளித்து நடைபெறும் பொதுத் தேர்தலில் எம்மை வெற்றியடையச் செய்ய வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். மறந்துவிடாதீர்கள் எங்கள் சின்னம்..............................

முரளி:- ஹ............ஹ............ ஹ (சிரிக்கிறான்)

ரவி:- முரளி! என்னடா சினிமாவில சிரிக்கிறது மாதிரிச் சிரிக்கிறாய்? எனக் கொண்டுமா விளங்கேல்லை,

முரளி:- ரவி..........! இது சினிமாச் சிரிப்பில்லை என்னுடைய இதயத்தை வாட்டுகின்ற வேதனைச் சிரிப்பு எத்தனை பம்மாத்துகள் பண்ணி எங்களையெல்லாம் ஏமாத்திப்போட்டார்கள்.................ம்...............!

ரவி:- ஓ! அதைச் சொல்லிறியா? அரசியல்வாதிகளெண்டாலே பெரும்பாலானவர்கள் அப்படித்தான். "வாய்ச் சொல்லில் வீரரடி கிளியே..........." என்று பாரதி சும்மாவே சொன்னவன்?

முரளி:- ரவி! அரசியல் ஏமாத்தெண்டாலும் ஒரு அளவிலே இருக்கவேணும், ஒரு இனத்துக்குள்ளே ஆட்சியைப் பிடிக்கிறதுக்கு இப்படிக் குத்துக்கறணம் போடுற ஆக்களைப் பார்த்திருக்கிறன் ..................இது மற்ற நாடுகளிலேயும் நடக்குதுதான் ஆனல்...............

ரவி:- விளங்குது! இனரீதியா நடக்கிற ஒரு போராட்டத்தில் இப்படியான பொய் வாக்குறுதிகளாலே மக்களை ஏமாற்றி இண்டைக்கு ஒரு இனத்தையே அனுதரவாக்கிப் போட்டாங்கள்.

முரளி:- அவங்களுக்கு வாக்குச் சீட்டுப் பெரிசு! தங்கடை பதவியள் பெரிசு! படாடோபமான வாழ்க்கை பெரிசு! இண்டைக்கு நாங்கள் படுகிற கஷ்டங்களைத் தீர்க்க எங்கடை வாக்குச் சீட்டுகளுக்கு வலு இல்லையே.

ரவி:- தேர்தலாலே எங்கடை தலைவர்கள் குதிச்ச காலத்தில இருந்தே ஒவ்வொரு வாக்களிப்பிலேயும் எங்கடை உரிமையள் பறிபோய்க் கொண்டே இருக்குது! ஆனபடியால்தான் நான் வாக்களிப்புக்களையும் தேர்தலையும் நம்புறதில்லை.

முரளி:- (திடீரென) அதென்ன ஆக்கள் கூட்டமா நிக்குதுகள்?

ரவி:- அ .. ...... அதொண்டுமில்லை நேற்றுக் கோயிலுக்குப் போன ஆக்களைச் சுட்டுப் போட்டாங்களாம்.

முரளி:- ஆர் ... ... ?

ரவி:- வேறையார்? கூலிப்படையள்தான்; அப்பாவி மக்களைக் கொலைசெய்யிறது, கொள்ளையடிக்கிறது, கற்பழிக்கிறது இதுகளுக்காகவே அவங்கள் ஏவி விடப்பட்டிருக்கிறுங்கள்.

முரளி:- ம் ... ... இந்த அநியாயத்தையெல்லாம் ''ஓட்டுப்'' போட்டு எப்படித்தான் தீர்க்கப் போறுங்களோ தெரிய இல்லை .........ம்.......... நாளைக்கு உன்ரை அரசியல் நோட்ஸ் கொப்பியையும் கொண்டுவா.

ரவி:- ஓம்; ஓம்! அப்ப நான் வாறன் முரளி (பிரிந்து செல்கிறுர்கள்)

(திரை)

## காட்சி 2

இடம்:- பாடசாலை

பாத்திரம்:- முரளி, ரவி, ஆசிரியர், A/L வகுப்பு மாணவர்கள்

நிலை:- வகுப்பு நடைபெறுகிறது.

ஆசிரியர்:- மாணவர்களே! வரலாற்றுப் பாடத்தில இவ்வளவு நேரமும் நான் தமிழ ருடைய பாரம்பரியம், எல்லைகளைப் பற்றி எல்லாம் கூறினேன். அதைச் சுருக்கமாகச் சொன்னுல்; தமிழ் அரசனை சிங்கை ஆரியனிடம் அனுமதி பெற்றே பண்டைக் காலத்து யாத்திரிகர்கள் இலங்கையைச் சுற்றிப் பார்த்திருக்கின்றனர். இபின்பருடா என்ற மொரெருக்கோ தேசத்து யாத்திரீகன் யாழ்ப்பாண அரசனே இலங்கையின் சக்கரவர்த்தி என்று எழுதியிருக்கிறுன்! பாணந்துறைவரை தமிழ் அதிகாரிகளே வரிகளைக்கூட வசூலித்திருக்கிறுர்கள். முரளி! நீ சொல்லு இதிலிருந்து நீ என்ன விளங்கிக் கொள்கிறுய்?

முரளி:- (எழுந்துநின்று) சேர்! தமிழர் இந்த நாட்டுக்கு வந்தேறு குடிகளில்லை என்பதும்; எங்களுக்கும் சிங்களவருக்கிருக்கிற எல்லா உரிமைகளும் இருக்கிறது என்ற உண்மையும் தெளிவாக விளங்குகிறது.

ஆசிரியர்:- குட்! சிட்டவுண்!

ரவி:- (எழுந்துநின்று) ஒரு சந்தேகம் சேர்!

ஆசிரியர்: யெஸ் ........!

ரவி:- சேர்! அப்படி எண்டால் ஏன் அரசியலமைப்புச் சட்டத்தில் சிங்கள மொழியே அரச மொழி என்றும் பௌத்த மதமே அரச மதமென்றும முதல் வரியிலேயே எழுதியிருக்கினம்?

ஆசிரியர்:- குட்! நல்ல கேள்வி! நான் இப்ப சொன்ன தமிழர் வரலாறுகளுக்கும் இதுக்கும் இடையிலே நிறைய இடைவெளி இருக்கு; அன்றைக்கும் இன்றைக்கும் இருக்கிற இந்த வித்தியாசத்தில் இருந்து நாம் காணும் உண்மை தமிழன் தனனுடைய உரிமைகளை விரைவாக இழந்து வருகிறான் என்பதுதான்.

முரளி – சேர்! இவ்வளவு விரைவாக எமது உரிமைகள் பறிக்கப்படக் காரணம்?

ஆசிரியர்:- ஒன்று எங்கடை உரிமைகள் பறிபோவதைத் தடுக்கிறதில் நாம் போதிய அக்கறை காட்டவில்லை. மற்றது எங்கடை உரிமைகளை அவர்கள் திட்டம் போட்டே பறித்து வருவதை நாங்கள் தெரிந்தும் தெரியாமலிருப்பது.

ரவி:- இந்த வேகத்தில் போனால் தமிழன் என்ற ஒரு இனமே இந்த நாட்டிலை இருந்திருக்குமோ என்றுதான் கேட்பார்கள்

ஆசிரியர்:- எங்கடை தமிழ்ப் புத்தகங்களிலேயே இப்ப எங்களை வந்தேறு குடிகள் எண்டுதான் எழுதி வருகிறார்கள்; அதுக்குத்தான் இந்த இலவச புத்தக விளையாட்டுகளையும் தொடங்கியிருக்கிறார்கள்.

ரவி } முரளி } :- இதற்கெல்லாம் என்ன சேர் தீர்வு?

ஆசிரியர்:- எல்லாமே உங்கடை கைகளிலே தான் இருக்கிறது; வளர்ந்த வரும் இந்தத் தலைமுறையின் கையிலதான் ஈழத் தமிழினத்தின் எதிர்காலமே இருக்கிறது.
(மணி அடிக்கிறது.)

(திரை)

## காட்சி 8

இடம்:- கடற்கரை மணல்

பாத்திரம்:- ரவி, முரளி, ராஜன்

நிலை:- ராஜன் வருகிறான்.

ராஜன்:- ஹலோ ரவி!...........முரளி! என்ன கடுமையாக யோசிச்சுக் கொண்டிருக்கிறியள்?

முரளி:- ராஜன் அண்ணையோ? வாருங்கோ .... .........எங்கடை எங்கடை யோசனை யோசனையெல்லாம் எதைப்பற்றி...........? எங்களுடைய எதிர்காலத்தைப் பற்றித்தான்.

ராஜன்:- உங்களுக் கென்னப்பா! இளம் பிள்ளையள் எங்கடை எதிர்காலம் தான் இருட்டாக் கிடக்குது.

ரவி:- ஏனண்ணை? உங்களுக் கென்ன? அரசாங்க வேலை! மாதம் முடிஞ்சதும் கையில சுளையாச் சம்பளம் வருகுது பிறகென்ன?

ராஜன்:- ம்................என்னத்தைச் சுளையா வாறது? எனக்கு இப்ப சம்பளத்தில எந்த ஏற்றமும் இல்லை, பென்சனும் கிடையாதெண்டு சொல்லிப் போட்டாங்கள். என்னட்டை வேலை பழகின அப்புஹாமி இப்ப "கிளாஸ் வன் ஒபிசர்"

முரளி:- அண்ணை நீங்கள் என்ன சொல்லுகிறியள்?

ராஜன்:- ஆம் தம்பி! நான் சிங்களம் படிக்கேல்லை - சிங்களம் பாஸ்பண்ணு விட்டால் சம்பள உயர்வும் இல்லை! பென்சனும் இல்லை! ம்.........எல்லாம் தமிழனாப் பிறந்த தலைவிதி தம்பி!

முரளி:- எத்தனை சட்டங்கள்? உலகத்தைச் சுற்றிவர ஆங்கிலம் தெரியவேணு மெண்டினம். விஷயம் அப்படி இருக்க இவங்களென்னடா எண்டால் சிங்களத்தைப் படி என்கருங்கள்! படிக்காட்டித் தண்டனை வேறே..........

ரவி:- தமிழனாப் பிறந்தால் இதுமட்டுமில்லைத் தண்டனை! தரப்படுத்தல் இருக்கு. காலத்துக்குக் காலம் கலவரம் எண்ட போர்வையில் கொலை, கொள்ளை இருக்கு...............கனக்க ஏன்! தமிழன் அகதியாய் போனாலும் அரசாங்கம் ஏனெண்டு கேளாது!

ராஜன்:- தம்பி கிழக்கு மாகாணத்தில் இருந்து அவங்கள் எங்கட பாரம் பரியமான பிரதேசங்களையெல்லாம் சூறையாடிக் கொண்டு வாருங்கள்; திட்டமிட்ட குடியேற்றங்கள் - தம்பி எங்கடை ஊரைப்பார் நாங்கள் அருவரி படிக்கேக் குள்ளை பார்த்தமாதிரியே இருக்கு ஆனல், அவங்கடை சிங்கள இடங் களைப்பார்...............எவ்வளவு அபிவிருத்தி

முரளி:- எங்களுக்கு எந்த உரிமைகளுமில்லை! அகதிகளாப் போனாலும் அரசாங்கத் தின்ரை ஆதரவில்லை! அப்படி இருக்க எங்களை ஆளுறதுக்கு மட்டும் அவையளுக்கு ஆசை!

ரவி:- இதை ஒரு காலமும் அனுமதிக்கக்கூடாது!

ராஜன்:- தம்பி இதையெல்லாம் இல்லாமல் செய்ய முதலிலை எங்கடை சமூகத்திலை இருக்கிற குறைகளை எல்லாம் முதலிலை களையவேணும்; நாங்கள் இந்தப் பாசீச வாதிகளுக்கெதிராக அணிதிரள வேணும் தம்பி!

முரளி:- அண்ணை நீங்கள் ...........?

ஓம் தம்பி! இந்தப் பிச்சைக்கார வேலையை விட்டெறிஞ்சுபோட்டு. எங்கடை பிரதேசத்தை நான் அபிவிருத்தி செய்யப்போறன் சம்பளத்துக் காக இந்த சண்டாளங்களட்டை இனிநான் கையேந்தப் போறதில்லை.

முரளி, ரவி :- அண்ணை! (இருவரும் சந்தோசமேலீட்டால் ராஜனை தூக்குகிருர்கள்)

ராஜன்:- விடுங்கோ! விடுங்கோ!

(திரை)

## காட்சி 4

இடம்:- ரவி வீடு

பாத்திரம்:- ரவி, முரளி, தேவி.

தேவி:- இந்தாங்கோ! தேத்தண்ணி குடியுங்கோ!

முரளி:- எனக்குத் தேத்தண்ணி வேண்டாம்

ரவி:- ஏனடா அப்பா! வாசிற்றி "என்றன்ஸ்" கிடைக்கேல்லை எண்டு கவலையோ?

தேவி:- முரளி! "ரூ B, ரூ C" எடுத்தும் உங்களுக்கு வாசிற்றி என்ரென்ஸ் கிடைக்கேல்லை எண்டுதான் எனக்கும் கவலை.

ரவி:- தேவி! என்ரை தேத்தண்ணி கிடக்கட்டும்; நான் இதிலை குளிச்சிட்டு ஓடியாறன். (செல்கிருன் கிணத்தடிக்கு)

தேவி:- முரளி! எனக்காக இந்தத் தேத்தண்ணியை எடுத்துக் குடியுங்கோ!

முரளி:- தேவி! ம்............உனக்காக இதையெண்டாலும் குடிக்கிறேன். (குடிக்கிருன்)

தேவி:- ஏன் முரளி விரக்தியாகப் பேசுறியள்?

முரளி:- தேவி! தொடர்ந்து படிக்க முடியாமல்ப் போனதே என்று எனக்குக் கவலை! படித்தும் வேலையில்லையெண்டு படிச்ச ஆக்களுக்குக் கவலை! வேலையாகியும் சிங்களம் பாஸ் பண்ணேல்லையெண்டு கொஞ்சப் பேருக்குக் கவலை!

தேவி:- முரளி! இந்தப் பிரச்சனையளிலே எங்கடை பிரச்சனையளை மறந்து போட்டியளோ?

முரளி:- தேவி! நீ...........?

தேவி:- ஓம்! எங்கடை கலியாணத்தைப் பற்றித்தான் சொல்லுறன்! முரளி! ஐயா எங்கடை சம்மதத்துக்காகத்தான் காத்திருக்கிருர்.

முரளி:- தேவி! உன்னை நான் காதலிச்சதை மறக்கேல்லை! ஆனல் எனக்கு சொந்த வருமானமில்லை! எங்களைச் சுற்றி எத்தனை பிரச்சனையள் வலைப் பின்னலாய் கிடக்குது.... .. ........?

தேவி:- முரளி! பிரச்சனையள் வாழ்க்கை முடியுமட்டும் இருக்கத் தான் செய்யும் ஐயா, சீதனமா ஐம்பதாயிரம் தருவார் அதை எடுத்துக் கொண்டு நாங்கள் இரண்டுபேரும் வெளிநாடு போவம்

முரளி:- தேவி! நீ என்னைத் தவருக எடைபோட்டுவிட்டாய்! நான் சீதனம் வாங்குவதற்காக உன்னைக் காதலிக்கவில்லை ஒரு பெண்ணை சீதனத்தை எதிர் பார்த்து மணக்கிற ஒரு சீர்கெட்ட ஆண்மகனில்லை நான் இந்தச் சீர் கெட்ட சீதனக் கொடுமை இந்தச் சமுதாயத்தை விட்ட அறவே ஒழிய வேணுமென்று விரும்புவன் நான்!
(இந்நேரம் பின்னல் கைதட்டும் ஒலி கேட்கிறது, திரும்பிப் பார்க்கிருன் அங்கே ரவி கைதட்டிக்கொண்டு வருகிருன்.)

ரவி - முரளி! உன்ரை கொள்கையை நான் பாராட்டுகிறேன் உனக்காக என்ரை தங்கச்சி எவ்வளவு காலம் வேண்டுமானுலும் காத்திருப்பாள்.

தேவி:- அண்ணு!

ரவி:- தேவி! சீதனக் கொடுமைகள் நிறைந்த எங்கடை தமிழ் சமுதாயத்திலை நாங்கள் செய்ய வேண்டிய முதலாவது சீர்திருத்தம் சீதனக் கொடுமைகளை அழிப்பதுதான்.

( திரை )

# காட்சி 5

இடம்:- வீதி

பாத்திரம்:- ராஜன், ரவி, முரளி, கணேஷ் (வேறுசிலர்)

(நாலுதிக்கும் வெடிச் சத்தங்கள் 'பட பட' வென்று தீருகின்றன. பொதுமக்கள் எல்லாம் வீடுகளிலிருந்து ஓடுகிறுர்கள்; பல வீடுகளில் அலறல்ச்சத்தம் கேட்கிறது. சில வீடுகளில் அழுகைக் குரல் (ஒப்பாரி) கேட்கிறது. இந்த அல்லோல கல்லோலத்தில் ராஜனுக்கும், சூட்டுக்காய மேற்பட்டுவிட்டது. ராஜனுக்கு முரளியும் ரவியும் முதலுதவிச் சிகிச்சை செய்கிறுர்கள்.)

ராஜன்:- தம்பி! ஆ.. ...........ஒரே வலியா இருக்கு

முரளி:- அண்ணை, காலை ஆட்டாதேயுங்கோ இரத்தப் பெருக்கைக் கட்டுப்படுத்தியிருக்கிறம். ஆமிக்காரன் இப்பதான் போய்க்கொண்டிருக்கிறுன். கொஞ்சம் செல்லத்தான் ஆஸ்பத்திரிக்குப் போகலாம்.

கணேஷ்:- நூறுபேருக்கு மேலே செத்துப் போச்சுதுகள்! இவங்களுக்கு ஏனிந்த வேலை? ஆமிக்காரங்கள் எவ்வளவு ஆயுதம் வைச்சிருக்கிறுங்கள்.

பொதுமகன் I:- அவங்கள் ஆளுகிற வர்க்கமல்லே அவங்களோடை போதி வெல்ல ஏலுமே?

பொதுமகன் II:- ஆமியோடை சேட்டை பண்ணிஞ இனி இந்த நாட்டில ஒரு தமிழனும் உயிரோடை இருக்க ஏலாது ஓ!

கணேஷ்:- ராஜன் அண்ணை நீங்கள் மதவாச்சியிலை வேலை செய்ததுபோலை அங்கேயே இருந்திருந்தால் இந்தக் கஷ்டமில்லை; இஞ்சை ஏன் வந்தனீங்கள்?

முரளி:- நீங்கள் விஷயம் தெரியாமல்ப் பேசிறியளப்பா? பொடியள் ஆயுத மேந்தினதாலேதான் இவ்வளவுக்குத்தன்னும் ஆமிக்காறங்கள் கட்டுப் பாட்டிலெ இருக்கிறுங்கள்.

கணேஷ்:- ஓ! இல்லாட்டி ஆமியை அடக்கித்தான் போடுவியள்; அவனுடை பிரச்சனைக்குப் போஞல் அவன் பிரச்சனைக்கு வருவான் தானையப்பா!

ரவி:- கணேஷ் அப்ப சுன்னுகத்தில சந்தைக்குப்போன பொம்பிளையளைச் சுட்டுத்தள்ளிஞங்களே அப்ப என்ன நடந்தது? ஒவ்வொரு நாளும் பத்துப் பதினைந்து என்று சுட்டுத் தள்ளிஞங்களே அப்ப என்ன நடந்தது! அதுக்கெல்லாம் என்ன காரணம்?

முரளி:- ''ஐடெண்டிக்காட்டோடை'' போய்ச் சரணடைந்த அடைச்சு வைச்சிருக்கிறுங்களே அதுக்கென்ன காரணம்!

ராஜன்:- தம்பியவை இஞ்சை ஒரு அழிப்பு வேலையும் காரணத்தோடை நடக்கயில்லை, அவங்கள் திட்டம் போட்டுத்தான் எல்லாம் செய்யிறுங்கள்.

முரளி:- அதை நீங்கள் முதலிலை புரியவேணும். உங்களை மாதிரிக் கனபேர் இப்பிடி மயக்கத்தில் இருக்கினம் அந்த மயக்கங்கள் கலைய வேண்டியதே இப்ப ஏற்பட வேண்டிய முக்கியமான சீர்திருத்தம்!

(திரை)

# காட்சி 6

இடம்:- முரளிவீடு

பாத்திரம்:- முரளி, தகப்பன், (கந்தவனம்) தாய் (இலட்சுமி)

கந்தவனம்:- முரளி! ஊறணி வாசிகசாலையிலும் தீர்த்தக் கடற்கரையிலும் நடந்ததைப் பார்த்தனிதானே?

இலட்சுமி:- அந்தப்பாழ் படுவான்கள் ஒன்றும் தெரியாத அப்பாவியளைக் குண்டு வைச்செல்லே கொண்டிருக்கிறுங்கள்! ஐயோ! கடவுளே இந்த அநியாயத்தைக் கேக்க ஆருமில்லையோ?

கந்தவனம்:- தம்பி! இனியும் நீ இந்த ஊரிலை இருந்தியெண்டால் என்ரை ஒரே பிள்ளையையும் நான் இழந்திடுவேன். ஆனபடியால்த்தான் சொல்லுறன் நீ உடனடியாக நாட்டைவிட்டுப் போகவேணும்.

இலட்சுமி:- ஓமடா தம்பி! உனக்கு ஒன்டென்டால் பிறகு நாங்கள் ஒரு நிமிஷம் உயிரோடை இருக்கமாட்டம்.

முரளி:- அம்மா! என்ன சொல்லுறியள் எங்கண்டை சுற்றுவட்டாரம் எல்லாமே செத்தவீடாத்தான் கிடக்கு இந்த நிலையில் நாங்கள் மட்டும் இப்பிடி நினைக்கிறது நல்லாயில்லை.

கந்தவனம்:- எது நல்லா இல்லை நாங்கள் என்ன ஈழம் கேட்டனுங்களே?

இலட்சுமி:- ஈழமெண்டால் அதென்ன லேசுப்பட்ட காரியமே?

முரளி:- ஐயா! இப்பிடி இப்படியே, சுயநலமா சுயநலமா சிந்திச்சுத்தான் இண்டைக்கு உலகத்தில் இருக்கின்ற எட்டுக்கோடி தமிழனுக்கும் ஒரு நாடில்லாமல் கிடக்கு.

கந்தவனம்:- எங்களுக்கேனப்பா நாட்டை? என்ன நாங்களே இந்த நாட்டை ஆழப் போகிறோம்? இராமன் ஆண்டாலென்ன லெட்சுமணன் ஆண்டாலென்ன நாங்கள் உழைச்சுப், பிழைச்சு, திண்டு, குடிச்சு நல்லா இருந்தா போதாதே.

முரளி:- ஐயா இது ஒரு காலமும் நடவாது! நேற்று பக்கத்து வீட்டுக்காறனுக்கு; நாளைக்கு எங்களுக்கு, பச்சைப் பாலகனையே வெட்டிக் கொல்லுறுங்கள் இதை எல்லாம் பார்த்துக்கொண்டு வெளிநாடு போகவேணுமோ?

கந்தவனம்:- அப்ப என்ன நீயும் இயக்கத்திலை சேரப்போறியோ?

முரளி:- ஓம்! இனி எங்களுக்கு அதேதான் ஒருவழி வேறை வழியே தெரியேல்லை

கந்தவனம்:- மடையா என்ன சூடுபட்டு சாகப்போறியோ?

இலட்சுமி:- அவங்களட்டை பிடிபட்டால் என்ன நடக்கும் தெரியுமே? ஆடாக்சட்டி தோலா உரிச்சுப் போடுவாங்கள்.

முரளி:- அம்மா! ஐயா! உங்களுக்கு நான் கடைசியாக சொல்லுறன் உங்கடை பிள்ளை உழைச்சுப் பணத்தைக் கொட்டுறதைவிட; எங்கடை தமிழ் மண்ணுக்காக உதிரம் கொட்டுறதை பெரிதா நினைக்கிறுன் எண்டுறதை முதல்லை நினைச்சுக் கொள்ளுங்கோ அவ்வளவுதான் வாறன்.

கந்தவனம்:- டேய் நில்............நில் ........எங்கையடா போறுய்?

(திரை)

## காட்சி 7

இடம்:- ராமன் வீடு

பாத்திரம்:- முரளி, கந்தவனம், ராமன்

நிலை:- முரளி, ராமன் பயிற்சி முடிந்து வரல்

முரளி:- மச்சான் இண்டைக்கு பயிற்சியிலே நல்லாக் கஷ்டப்பட்டுப் போனன்! மேலெல்லாம் வலிக்குது!

ராமன்:- முரளி! எங்கடை தேகத்தை, அடக்கி, மனத்தை ஒறுத்தால்தான் ஒரு உண்மையான போராளியாக நாம் வரலாம்.

முரளி:- ஓம்! ஓம்! எங்களைப் பொறுத்தவரை இனி எல்லாக் கஷ்டங்களையும் இன்பங்களாகத்தான் ஏற்றுக்கொள்ள வேணும்.

ராமன்:- சுட்டுச் சுட்டுத்தான் பொன் மெருகேறும் அதே போலத்தான் நாங்களும் எங்களை வருத்தி உயர்ந்த நோக்கத்திற்காகப் பாடுபடுகிறபோது அதுவே விடுதலைக்கு வித்தாக அமையும்.

முரளி:- எங்கை கிணத்தடி!

ராமன்:- முரளி! எங்களுக்கு கிணறெல்லாம் கிடையாது, பொதுக் கிணறுதான்! இந்தப் பானையிலை கிடக்கிற தண்ணியிலைதான் மேலைக்கழுவ வேணும். (மேல் கழுவுதல்)

முரளி:- மச்சான் நான் மேலைக் கழுவுறன் நீ...............

ராமன்:- சாப்பாடு ரெடியா இருக்கு வாவன்
(சாப்பாடு நடத்தல்)

முரளி:- நல்லா இருக்கப்பா ஆர் சமையல்?

ராமன்:- ஆச்சிதான் எனக்கு அம்மா இல்லை?

முரளி:- மன்னிச்சுக்கொள் ராமன்!
(இவ்வேளை கந்தவனம் வரல்)

கந்தவனம்:- டே! முரளி இதென்னடா வேலை அவங்களென்ன யாதி நாங்களென்ன யாதி? நீ எங்கையடா சாப்பிடுறாய்?

முரளி:- ஐயா! அதென்ன யாதி எனக்கு விளங்க இல்லை?

கந்தவனம் - டே! பள்ளவீட்டிலை சாப்பிட்டு எந்தை பரம்பரைக்கே இழுக்கைத் தேடிப் போட்டாய் நடவடா வீட்டை!

முரளி:- ராமன்! என்னை மன்னிச்சுக்கொள்! ஐயா! நாங்கள் பள், நளம் எண்டு சாதிக்கிறம் ஆமிக்காறனுக்கு அது கிடையாது. இனி எண்டாலும் இந்த பழைய குப்பையளை மறவுங்கோ.

கந்தவனம்:- அந்த இந்தக் கதை வேண்டாம் நீ முதலிலை நட

முரளி:- ஐயா மன்னிச்சுக் கொள்ளுங்கோ இப்போ என்னாலை வரமுடியாது.

கந்தவனம்:- வர ஏலாதோ! சரி, சரி நீ அந்தளவுக்கு வந்துவிட்டியோ இனி நீ எந்தை வீட்டுப் படலையிலையும் மிதிக்கக்கூடாது! வாறன் (செல்லல்)

ராமன்:- நில்லுங்கோ நீங்கள் இப்பிடி கோவிக்கக்கூடாது.

கந்தவனம்:- சீ வாடா (செல்லல்)

முரளி:- ராமன்! வேண்டாம் இப்பிடி வா; இனி தமிழனி சாதி ஏற்றத் தாழ்வுகள் கிடையாது! நானும் நீயும் இனி தோழர்கள் இந்த சாதியமைப்பை அழிப்பதே எமது விடுதலையின் முதல்படி.

(திரை)

# காட்சி 8

இடம்:- தேவி வீடு

பாத்திரம்:- தேவி, ரவி

தேவி:- அண்ணை இத்தனை நாளாச்சு என்னம் முரளியின்ரை தகவல்களே இல்லை எனக்கு சரியான கவலையாயிருக்கு

ரவி:- தேவி! நீ கவலைப்படக்கூடாது! அவர் உயர்ந்த நோக்கத்திற்காகப் போயிருக்கிறார். அது வெற்றிபெற நாங்களும் பார்வையாளராக இருக்காமல் பங்காளிகளாக மாறவேணும்.

தேவி:- பங்காளிகளெண்டு எனக்கு விளங்கேல்லையண்ணை?

ரவி:- தேவி! தமிழீழம் எண்டுறதை தாம்பாளத்தில் வைச்சுத் தரமாட்டாங்கள் அதை நாங்கள் போராடித்தான் பெறவேணும் இந்தா இந்த அல்பத்தைப் பார்.

[நமது வீரமரண மடைந்த போராளிகளின் படங்களை தனித் தனியாக காட்டுதல்]

[காட்டும்போது அவர்களின் பெயர்களையும் கூறுகிறான்]

தேவி:- அண்ணை இவை எல்லாம்?

ரவி:- தேவி இவையெல்லாம் மண் விடுதலைக்காக தங்களுடைய உயிரையே துச்சமாக மதித்துச் செயற்பட்ட தியாகிகள் இவர்கள் இந்த இனத்திற்கு ஒரு நாடு பெறுவமெண்டதிற்காக அயராது பாடுபட்ட செல்வங்கள்.

தேவி:- இவையள் இப்ப உயிரோடு இல்லையே

ரவி:- வீரர்கள் மரணமடைவதில்லை! அவர்களுடைய புகழ் இந்த மண் உள்ள வரையும் அழியாது!

தேவி:- அண்ணை இப்ப நானும் ஒரு முடிவு எடுத்திட்டன்

ரவி:- தேவி ........... நீ............ .. ....

தேவி:- ஓம் அண்ணை! நானும் முரளியைப் போல போராட்டத்தில் குதிக்கப் போறன் ஆண் பெண் என்ற பேதமும் இனிமேல் மறையவேணும்

ரவி:- அப்ப உங்கடை....................

தேவி:- தமிழ் ஈழத்திலை முதல் முதலா நடக்கிற விழா எங்கடை கலியாணமா இருக்க வேணும் எண்டுறது தான் என்னுடைய ஆசை

ரவி:- தங்கைச்சி உன்னைத் தங்கையாக அடைய நான் கொடுத்து வைச்சிருக்க வேணும்! உன்னைப் போல தாய்க் குலம் தான் எமது விடுதலைப் பாதைக்கு வேர்கள் இனி எங்கடை விடுதலை அதிக தூரத்தில் இல்லை

இருவரும் கைகளை உயர்த்தி நிற்க

வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும் (பாடல்)

(திரை)

வணக்கம்